ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351





வெள்ளி ❖ நவம்பர். 10, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 38 ❖ ரூ.10




பிஹார் சட்டப்பேரவையில் இடஒதுக்கீட்டை 65% ஆக உயர்த்தும் மசோதா

# தாக்கல்

## உச்சநீதிமன்றம் அனுமதித்த 50 சதவீத இடஒதுக்கீடு என்ற உச்ச வரம்பையும் தாண்டி 65 சதவீதம் இடஒதுக்கீடு தர இந்த மசோதா வழிவகை செய்கிறது.

பாட்னா , நவ. 10–

அரசு வேலை மற்றும் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீட்டை 65 சதவீதமாக உயர்த்தும் வகையில் பிஹார் சட்டப்பேரவையில் நேற்று (வியாழக்கிழமை) இடஒதுக்கீடு சட்டத் திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது. பிஹாரில் பட்டியலினத்தோர், பழங்குடியினத்தவர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோர் உள்ளிட்ட பிரிவினருக்கான இடஒதுக்கீட்டு அளவை 65 சதவிகிதமாக உயர்த்த அம்மாநில அமைச்சரவை



அண்மையில் ஒப்புதல் வழங்கிய நிலையில், அம்மாநில சட்டப்பேரவையில் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

முன்னதாக, பிஹார் சட்டப்பேரவையில், சாதிவாரி கணக்கெடுப்பு தொடர்பான அறிக்கை செவ்வாய்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. அதனை தாக்கல் செய்த முதல்வர் நிதிஷ்குமார், இடஒதுக்கீடு உயர்த்தப்படும் என்று சட்டப்பேரவையிலேயே அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கெனவே உச்சநீதிமன்றம் அனுமதித்த 50 சதவீத இடஒதுக்கீடு என்ற உச்ச வரம்பையும் தாண்டி 65 சதவீதம் இடஒதுக்கீடு தர இந்த மசோதா வழிவகை செய்கிறது. பொருளாதார ரீதியாக பின் தங்கிய வகுப்பினருக்கான 10 சதவீத இடஒதுக்கீடும் இருப்பதால் பிஹாரின் புதிய இடஒதுக்கீடு சட்டம் அமலுக்கு வந்தால், கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மொத்தம் 75 சதவீதம் இடஒதுக்கீட்டின் கீழ் சென்றுவிடும்.

பட்டியலினத்தோர்: 20 சதவீதம், பழங்குடியினர்: 2 சதவீதம், இதர பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்: 43 சதவீதம் என்றவீதத்தில்இடஒதுக்கீடு அமல்படுத்தப்படும்.

தற்போதைய சூழலில் பிஹாரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 18 சதவீதம், ஓபிசிக்களுக்கு 12 சதவீதம், பட்டியலினத்தோருக்கு 16 சதவீதம் மற்றும் பழங்குடியினத்தவருக்கு 1 சதவீதம், பிற்படுத்தப்பட்ட வகுப்பின் மகளிருக்கு 3 சதவீதம் என்று இடஒதுக்கீடு கல்வி நிலையங்களிலும், வேலை வாய்ப்புகளிலும் அமலில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மசோதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டபோது, மசோதாவில் 10 சதவீதம் பொருளாதார ரீதியாக பின்தங்கிய வகுப்பினருக்கான இடஒதுக்கீடு பற்றி ஏதும் குறிப்பிடப்படாதது குறித்து கேள்வி எழுப்பபட்டது. அந்த இடஒதுக்கீட்டில் எந்த ஒரு குழப்பமும் வந்துவிடக் கூடாது என வலியுறுத்தப்பட்டது.

## உலக அரங்கில் புதிய உச்சங்களை இந்தியா தொட்டிருக்கிறது : பிரதமர் மோடி

சாட்னா (மத்தியப் பிரதேசம்), நவ. 10–

உலக அரங்கில் இந்தியா புதிய உச்சங்களை தொட்டிருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.



மத்தியப்பிரதேச சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, சாட்னாநகரில்நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: உலக அரங்கில் புதிய உச்சங்களை இந்தியா தொட்டிருக்கிறது. மகான்கள் மற்றும் மக்களின் ஆசிர்வாதமே இதற்குக் காரணம். மக்கள் தங்கள் வாக்குகளைக் கொண்டு இந்த அதிசயத்தை நிகழ்த்தி இருக்கிறார்கள். வாக்குக்கு இருக்கும் இந்த சக்திதான், நாட்டின் எதிரிகளின் துணிச்சலை முறியடித்திருக்கிறது.

இம்முறையும் நீங்கள் பாஜகவுக்கு வாக்களிக்க வேண்டும். மத்தியப் பிரதேசத்தில் பாஜக ஆட்சியை அமைப்பதன் மூலம், மத்தியில் எனது கரம் வலுப்படும். உங்கள் ஓட்டு, காங்கிரஸை வெளியே தள்ளுவதாக இருக்க வேண்டும். மத்தியப் பிரதேசத்தை எப்படி முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனை காங்கிரஸ் கட்சிக்குக் கிடையாது. காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால், இளைஞர்களுக்கு எதிர்காலம் இருக்காது. எனது வாக்குறுதி மீது மத்தியப் பிரதேசம் நம்பிக்கை கொண்டிருக்கிறது.

தற்போது நான் எங்கே சென்றாலும் அயோத்தி ராமர் கோயில் குறித்தே மக்கள் அதிகம் பேசுகிறார்கள். மகிழ்ச்சி அலை எல்லா இடங்களிலும் பரவி இருக்கிறது. வீடு இல்லாத மக்களுக்கு நல்ல வீட்டினை கட்டித் தருவதில் முந்தைய காங்கிரஸ் அரசு தோல்வி அடைந்தது. எனது வாக்குறுதியின்படி, வீடு இல்லாதவர்களுக்குநல்ல வீடு கட்டித்தரப்படும் என்று பிரதமர் மோடி உரை நிகழ்த்தினார்.



# இன்று

**10-11 2023**




சுக வருடம் 1945 கார்த்திக 19
நெல்லிக்காய் இடித்த சாறு தேன் கலந்து சாப்பிட்டால் விக்கல் தீரும்

| சோபகிருது ஐப்பசி 24 | NOV - FRI வெள்ளி | ரபிஉல்ஆகிர் 25 | இராசிபலன் |
|---|---|---|---|
| | | தெய்பிறை 314 / 051 | |

தேய். துவாதசி 17.03 (மா. 12.59) ஹஸ்தம் 47.26 (கா. 01.08) நியாஜ் 05.08 அகஸ் 29.03 அமிர்த 47.26 மேல் சித்த. சுபமுகூர்த்தம். பிரதோஷம். திருஇந்தளூர் பரிமளரெங்கராஜர் சேஷ வாகனத்தில் வீதியுலா. மாயவரம் கௌரிமாயூரநாதர் கற்பகவிருட்சம், காமதேனு வாகன வீதியுலா. சிறியநகக.

| | நல்லநேரம் | கௌரி.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 12.15-1.15 | 1.45-2.45 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை | 4.45-5.45 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு
பரிகாரம் : வெல்லம்
துலா லக்கனம் இருப்பு நா. 1 வி. 10
கரணம் : 1.30-3
சூரிய உதயம் : 6.10
சந்திராஷ்டமம் சதயம் பூரட்டாதி
அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

**இராசிபலன்**
மேஷம் - வெற்றி
ரிஷபம் - நிம்மதி
மிதுனம் - புகழ்
கடகம் - பயம்
சிம்மம் - அமைதி
கன்னி - சினம்
துலாம் - உற்சாகம்
விருச்சி - சலனம்
தனுசு - ஆக்கம்
மகரம் - எதிர்ப்பு
கும்பம் - பயணம்
மீனம் - பக்தி

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

"விதி என்பது உங்களுக்கு நீங்களே உருவாக்கிக்கொள்வது. உங்கள் விதியை நீங்களே உருவாக்கத் தவறும்போது அது தலைவிதியாகிறது."



புதுக்கோட்டையில் மிகப்பெரிய தங்க நகை ஷோரூம்
ஸ்ரீ பார்வதி'ஸ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை தயாரிப்பாளர்கள்
TS.No.3208 கீழராஜ வீதி, புதுக்கோட்டை– 1
Cell : 98433 07916,04322233544

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs. 5,715 | Rs. 6,185 |


# வாசுதேவநல்லூரில் வியாசா பெண்கள் கல்லூரியில் விபத்தில்லா தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்காசி,நவ.10–

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சுப்பிரமணியபுரத்தில் இயங்கி வரும் வியாசா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் நாட்டு நலப் பணி திட்டம் யூத் ரெட் கிராஸ் மற்றும் வாசுதேவநல்லூர் தீயணைப்பு நிலையமும் இணைந்து நடத்திய விபத்தில்லா தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் தீயணைப்பு துறையினரால் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது.

நிகழ்ச்சியில் கல்லூரியின் சேர்மன் ச.வெள்ளத்துரை பாண்டியன் தலைமை வகித்தார், தீயணைப்பு துறை நிலைய அலுவலர் கருப்பசாமி தீயணைப்பு நிலைய வாகன அலுவலர் முருகன் மற்றும் தீயணைப்பு பணியாளர்கள் கலந்துகொண்டு செயல்முறை விளக்கமளித்தனர். தீபாவளி விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி நிர்வாக இயக்குனர் வெ. வெள்ளத்தாய் வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் ர.ஈஸ்வரன், தேர்வு ஒருங்கிணைப்பாளர் ச. சுஜாதா, நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் பொ.ஆவுடையம்மாள், விழிப்புணர்வு நிகழ்ச்சியில் வரவேற்புரை வழங்கிய கணிதத்துறை தலைவி எஸ். சாரதா நெல்லை நாயகி, அனைத்துதுறை தலைவர்கள், பேராசிரிய பெருமக்கள் மற்றும் வியாசா கல்லூரியின் இளநிலை, முதுநிலை மாணவியர்கள்பங்கு பெற்று பயனடைந்தனர்.

# பருத்திப் பயிரில் நுண்சக்தி வேளாண்மை அரியலூர் வேளாண்மை உதவி இயக்குனர் தகவல்

அரியலூர்,நவ.10–

பருத்தி பயிரில், நுண் சக்தி வேளாண்மை திட்டத்தை செயல்படுத்தும் படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இது பற்றி அரியலூர் வேளாண்மை உதவி இயக்குனர் சாந்தி வெளியிட்ட செய்தி குறிப்பில்,

அரியலூர் வட்டாரத்தில், பருத்தி பயிர் சுமார் 2500 ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு, பூ பிடிக்கும் பருவத்தில் உள்ளது, தற்போது பெய்து வரும் மழையை பயன்படுத்தி, பருத்திப் பயிரில் வளர்ச்சியை அதிகரிக்கவும், அதிகப்படியான பூ சப்பை உருவாவதற்கும், பருத்தி நுண் சத்து இடவேண்டும்.

இந்த நுண் சத்து, அரியலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில், 50 சதவீதம் மானியத்தில் கிடைக்கும் வகையில், போதுமான அளவு இருப்பில் உள்ளது. இதனை ஒரு ஹெக்டேருக்கு, 12.5 கிலோ வீதம் 37 கிலோ மணல் கலந்து இட்டு, அதிக மகசூல் பெறுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மூத்த புகைப்படக் கலைஞர் குமரேசன் மறைவுக்கு முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி



சென்னை, நவ. 10–

"மூத்த புகைப்படப் பத்திரிகையாளரும், விகடன் முன்னாள் தலைமைப் புகைப்படக் கலைஞருமான சு. குமரேசனின்,திடீர்மறைவு புகைப்பட இதழியல் உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், மூத்த புகைப்படப் பத்திரிகையாளர், விகடன் முன்னாள் தலைமைப் புகைப்படக் கலைஞர் சு. குமரேசன் நேற்று முன்தினம் மறைவெய்தினார் என்று அறிந்து வருந்துகிறேன்.

திராவிட இயக்க மேடைகளில் பகுத்தறிவு ஒளிவீசிய மகா மதுரகவி வீ.வே. முருகேச பாகவதரின் பெயரனான குமரேசன், விகடன் குழுமத்தில் 20 ஆண்டுகளுக்கும்மேலாக முக்கிய பொறுப்புகளில் பணியாற்றியவர். கடந்த வாரம்தான் பூர்வீகக் குடிகளின் பாவலர் முருகேச பாகவதர் படைப்பு நூலுக்கு எனது வாழ்த்துச் செய்தியை பெற்றுச் சென்றார்.

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்று பக்கங்கள் பலவற்றை தனது புகைப்படக் கருவியின் வாயிலாகப் பதிவு செய்தவர். மறைந்த முதல்வர் கருணாநிதி, நான் உட்பட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களின் புகைப்படங்களைப்பதிவு செய்தவர். குமரேசனின் திடீர் மறைவு புகைப்பட இதழியல் உலகுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்லையும் ஆறுதலையும்தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ளார்.



கார்த்திக் மெஸ்
உயர்தர அசைவ உணவகம்
Rtn. S.மூர்த்தி & பிரதர்ஸ்
சிவகாமி அம்மன் இரத்ததான கழகம்
புதுக்கோட்டை மாவட்ட இயற்கை விவசாயிகள் சங்கம்
புதிய பேருந்துநிலையம் எதிரில், புதுக்கோட்டை
செல் : 94426 42437


இஸ்ரேல் -ஹமாஸ் போர் - மத்திய அரசை வலியுறுத்தி

# நவ.20–ல் கண்டன ஆர்ப்பாட்டம் இடதுசாரி அமைப்புகள் கூட்டறிக்கை

சென்னை, நவ. 10–

மேற்கு ஜெருசலேத்தை தலைமையிடமாகக் கொண்டு சுதந்திர நாடாக பாலஸ்தீனம் ஏற்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என நவ.14 முதல் நவ.16 வரை தமிழகம் முழுவதும் பரப்புரை இயக்கமும், நவ.20 ஆம் தேதி, சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று இடதுசாரி அமைப்புகள் கூட்டறிக்கை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக மார்க்சிஸ் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் சிபிஐ (எம்.எல்) கட்சிகளின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள கூட்டறிக்கையில் கூறியிருப்பதாவது: இனவெறி பிடித்த இஸ்ரேல் பாலஸ்தீன மக்களை அடியோடு அழித்து விட வேண்டுமென்று வெறித்தனமானத் தாக்குதலை அக்டோபர் 7-ம் தேதி முதல் நடத்தி வருகிறது. இந்த மனிதாபிமானற்ற தாக்குதலில் இதுவரை பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள், குழந்தைகள், பெண்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். பல்லாயிரம் பேர் படுகாயமுற்று உயிருக்குப் போராடி வருகிறார்கள். லட்சக்கணக்கான மக்கள் உடைமைகளையும், இருப்பிடங்களையும் இழந்து அகதிகளாக அலைந்து வருகின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்திய அரசின் ஆதரவுடன் இஸ்ரேல் நடத்தும் ராணுவத் தாக்குதல் போர் நியதிகள் அனைத்தையும் நிராகரித்து பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், மக்கள் குடியிருப்புகள் என நாடு முழுவதும் இடைவிடாது குண்டு மழை பொழிந்து வருகிறது. இதில் ஐக்கிய நாடுகள் சபை அலுவலர்கள், செஞ்சிலுவை சங்கத்தினர் உட்பட பலரும் கொல்லப்பட்டு வருகின்றனர்.

தாயக உரிமைக்காகப் போராடி வரும் பாலஸ்தீன மக்களுக்கு இந்தியநாடு ஆரம்ப காலத்தில் இருந்து ஆதரவு தெரிவித்து வருகிறது. இந்த வழிவழியான சமாதான ஆதரவு நிலையில்இருந்துபாஜகமத்திய அரசு முற்றிலும் மாறுபட்டு, அமெரிக்க அரசோடும், அதன் வழி இஸ்ரேலுடன் இணைந்து நின்று பாலஸ்தீன மக்களை கொன்றழிக்கும் கொடுங்குற்றத்துக்கு துணை போகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுசபைக் கூட்டத்தில் போர் நிறுத்தம் குறித்த தீர்மானத்தை ஆதரிக்காமல் பாஜக மத்திய அரசு இஸ்ரேலுக்கு ஆதரவான நிலை எடுத்தது. இந்த நிலையில் அமெரிக்க அரசின் செயலாளரும், பாதுகாப்புத்துறை செயலாளரும் இந்தியா வந்து, நமதுமத்திய அரசின்பாதுகாப்பு மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சகங்கள் மட்டத்தில் 07.11.2023 முதல் 10.11.2023 வரை பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இதில் பாஜக மத்திய அரசு இஸ்ரேல் போர் நிறுத்தத்தை அறிவிப்பதற்கு நிர்ப்பந்திக்க வேண்டும். அமெரிக்க அரசு இஸ்ரேலுக்கு வழங்கி வரும் ராணுவ ஆயுதங்கள், நிதியுதவிகள் நிறுத்தப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபை மிகப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றிய போர் நிறுத்தம் உடனடியாக ஏற்கப்பட வேண்டும்.

ஐக்கியநாடுகள் பாதுகாப்பு கவுன்சில் பாலஸ்தீனர்களின் நீண்ட போராட்டத்துக்கு தீர்வாக முன்மொழிந்துள்ள இரு நாடுகள் கொள்கை ஏற்கப்பட்டு, 1967–க்கு முந்தைய நிலையில் மேற்கு ஜெருசலேத்தை தலைமையிடமாக கொண்டு சுதந்திர நாடாக பாலஸ்தீனம் ஏற்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என பொதுமக்களிடம் நவ.14 முதல் நவ.16 வரை தமிழகம் முழுவதும் மாவட்ட, வட்டார அளவில் பரப்புரை இயக்கம் நடத்துவது என்றும், நவ.20 தலைநகர் சென்னையில் கட்சியின் மாநிலத் தலைவர்கள் பங்கேற்கும் கண்டன ஆர்ப்பாட்டம்நடத்துவதுஎன்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வெளியுறவு கொள்கையைப்பாதுகாக்கநீடித்த சமாதானம் நிலவ வேண்டும் என்றகொள்கையைவலியுறுத்தி நடைபெறும் பரப்புரை இயக்கம் மற்றும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் மற்றும் ஜனநாயக சக்திகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென இடதுசாரி கட்சிகள் அழைக்கின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடையநல்லூர் கேம்பிரிட்ஜ் மெட்ரிக் பள்ளியில் உணவு திருவிழா



கடையநல்லூர்,நவ.10–

கடையநல்லூர் மங்களாபுரம் நியூ கேம்பிரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் உணவுத் திருவிழா நடைபெற்றது, விழாவிற்கு மாவட்ட கல்வி அலுவலர் தனியார் பள்ளிகள் ராமசுப்பு தலைமை வகித்தார்.

கடையநல்லூர் நகர் மன்றத் தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான் முன்னிலை வகித்தார், அக்பர் கல்வி குழுமத்தின் தலைவர் மற்றும் தாளாளர் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தென்காசி மாவட்ட துணைத்தலைவர் என்.எஸ். அக்பர்அலி எம்சி வரவேற்றார், திமுக முன்னாள் மாவட்டச் செயலாளரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான மா.செல்லத்துரை உணவு திருவிழா அரங்கை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார், ஊட்டச்சத்து ஆலோசகர் முகம்மது அஸ்லான் அலி மற்றும் பள்ளியின் முதல்வர் , நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்.

# லிட்டில் ப்ளவர் அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளிக்கு பாரத மிகுமின் நிறுவனம் சார்பில் உதவி




புதுக்கோட்டை , நவ. 10–

பாரத மிகு மின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் சார்பாக புதுக்கோட்டை மாவட்டம் திருமலைராயசமுத்திரத்தில் இயங்கிவரும் லிட்டில் ப்ளவர் அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளியில் பொருளாதாரத்தில் பின் தங்கிய மாணவ, மாணவிகளுக்கு பள்ளி சீருடை அறக்கட்டளையின் கல்விக்குழு சார்பாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் புதுகை வரலாறு ஆசிரியர் சு.சிவசக்திவேல் மற்றும் சமூக சேவகர் சிவகுமார் (பகவான் டீ ஸ்டால்) ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துக்கொண்டு சிறப்பித்தனர். பள்ளியின் சார்பாக பள்ளியின் தலைமை ஆசிரியை மேபிள் பெட்ரிசியா, மற்றும் அறக்கட்டளையின் அழைப்பினை ஏற்று அறக்கட்டளையின் கல்வி குழுத் தலைவர் பிரகாஷ், அறக்கட்டளையின் நிர்வாகிகள் முத்துராமன், சந்தோஷ் குமார், பாலாஜி, ராமதாசு பள்ளியின் ஆசிரிய பெருமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் உள்ள

# விவசாயிகளை பயிர் காப்பீடு செய்யுமாறு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேண்டுகோள்



ஆவுடையார்கோவில், நவ.10–

ஆவுடையார்கோவில் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் உடன் பயிர் காப்பீடு செய்யுமாறு ஆவுடையார்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர்சவீதாவிசையிகளை கேட்டுகொண்டுள்ளார்

இது பற்றி பேசிய வேளாண்மை உதவி இயக்குனர் நடப்பாண்டு சம்பா பருவத்தில் பயிர் செய்துள்ள அனைத்து விவசாயிகளும் தற்போது நெற்பயிர் காப்பீடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது மேலும் இயற்கை இடர்பாடுகள், வெள்ளம், வறட்சி மற்றும் பூச்சி நோய் தாக்குதலில் உள்ள இடர்பாடுகளில் இருந்தும் மகசூல் இழப்பு பாதிப்பில் இருந்தும் தங்களை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் வருவாய் இழப்பீடு சரி செய்வதற்கும் பிரதமமந்திரியின்பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் உடன் பிரிமிய தொகையான ரூபாய் 513 ஒரு ஏக்கருக்கு செலுத்தி காப்பீடு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

நெற்பயிருக்கு பயிர் காப்பீடு செய்வதற்கு இம்மாதம்15–ம் தேதி கடைசி ஆகும், காப்பீடு செய்வதற்கு தேவையான ஆவணங்கள் முன்மொழிவு படிவம் மற்றும் சிட்டா அடங்கள் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பகுதி ஆதார் அட்டை நகல் ஆகையவற்றுடன் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பொது சேவை மையங்கள் ஆகியவற்றில் பயிர் காப்பீடு செய்யலாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# நான் ராஜஸ்தானின் எதிர்காலத்தைப் பார்க்கிறேன் ராகுல் என்னிடம் இதைத்தான் சொன்னார் – சச்சின் பைலட்



டோங்க் : நவ. 10,

ராஜஸ்தானில் யார் ஆட்சியை வழிநடத்துவது என்பதைஎம்எல்ஏக்களும், காங்கிரஸ் தலைமையும் முடிவு செய்யும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சச்சின் பைலட் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்றுவரும் ராஜஸ்தானில், சில மாதங்களாகவே முதல்வர் அசோக் கெலாட்டுக்கும், முன்னாள் துணை முதல்வர் சச்சின் பைலட்டுக்கும் இடையே வெளிப்படையான மோதல்போக்குநிலவியது. இதற்கிடையில் காங்கிரஸ் தலைமையில் இருந்து பல்வேறுகட்ட சமாதான பேச்சுவார்த்தைகள் நடந்தபோதும், கடந்த பாஜக ஆட்சியில் நடந்த ஊழல்கள்மீது நடவடிக்கைஎடுக்குமாறு, உண்ணாவிரதம், பாதயாத்திரை போன்றவற்றை முன்னெடுத்துவந்தார் சச்சின் பைலட்.

இத்தகைய சூழலில்தான் மல்லிகார்ஜுன கார்கே, அசோக் கெலாட்டையும், சச்சின் பைலட்டையும் தனது இல்லத்துக்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன்பிறகு நாங்கள் இணைந்து செயல்பட்டால் ராஜஸ்தானில் மீண்டும் ஆட்சியமைப்போம் என அசோக் கெலாட் கூறினார்.

இந்த நிலையில், காங்கிரஸ் மூத்த தலைவர் சச்சின் பைலட் தனியார் தொலைக்காட்சிக்கு ஒரு பேட்டியளித்தார். அதில், "காங்கிரஸ் கட்சி ஒற்றுமையாகஇருக்கிறது. ஆனால் பாஜகவில்தான் கோஷ்டி மோதல், பதற்றம், சண்டைகள் உள்ளன. மல்லிகார்ஜுன கார்கே மற்றும் ராகுல் காந்தி ஆகிய இருவரும் என்னிடம் 'மன்னிக்கவும், மறந்துவிடவும், முன்னேறவும்' என்று கூறினார்கள். நான் ராஜஸ்தானின் எதிர்காலத்தை பார்க்கிறேன். முதலில் காங்கிரஸை ஒன்றாக சேர்த்து வெற்றிபெறச் செய்வோம். அதன்பிறகு, யார் என்ன செய்ய வேண்டும் என்பதை எம்எல்ஏக்கள் மற்றும் கட்சித் தலைமை முடிவு செய்யும்.

2018–ல் காங்கிரஸ் எதிர்க்கட்சியாகஇருந்தது. ஆனால் இந்த முறை நாங்கள் ஆளுங்கட்சியாக இருக்கிறோம். இந்த ஐந்தாண்டுகளாக கிராமங்களில் நாங்கள் கொண்டு வந்த வளர்ச்சியை மக்கள் பார்த்துள்ளனர். இந்தத் தேர்தல் வரலாற்று சிறப்புமிக்கதாக இருக்கும், டோங்க் தொகுதியில் கோவிட்–19 தொற்றின்போது மக்களுக்கு நிறைய உதவிகளை செய்துள்ளோம். எனவே என்னுடைய டோங்க் தொகுதியில் அதிகவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம். காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரும். உணர்ச்சிகரமான பிரச்சினைகளை பாஜக அரசியலாக்குகிறது. மின்சாரம், குடிநீர், கல்வி போன்ற மக்கள் நலப் பிரச்சனைகளை பேசாமல், அதற்குப் பதிலாக மதம், கோயில்கள், மசூதிகள் பற்றி பேசுகிறது பாஜக" என்றார்.


## காணவில்லை

அரியலூர் மாவட்டம், செந்துறை தாலுகா, நல்லாம்பாளையம் கிராமத்தை சேர்த்த நான், எனது கணவர் இறந்து விட்டதால், திருச்சியில் உள்ள எனது மகள் வீட்டில் வசித்து வருகிறேன். எனக்கு சொந்தமான, **சர்வே எண் 282/ 11** க்கு உரிய சொத்து, செந்துறை தாலுக்கா, மருவத்தூர் வருவாய் கிராமத்தில் உள்ளது. 07.08.2023 அன்று காலை 11 மணிக்கு, நான் மேற்கண்ட சொத்துக்கான அசல் பத்திரம், எனது ரேஷன் கார்டு, ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன், செந்துறை தாலுக்கா அலுவலகம் செல்வதற்காக வந்து, செந்துறை அம்பேத்கர் சிலை அருகே உள்ள டீக்கடையில், நான் கொண்டு வந்த பையை வைத்துவிட்டு, டீ குடித்தேன். அதன் பிறகு அந்தப் கைப்பையை காணவில்லை. அதிலிருந்த, எனக்கு சொந்தமான, செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் 1022 –ம் எண்ணில் 1988 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட அசல் பத்திரம் மற்றும் ரேஷன் கார்டு, ஆதார் அட்டை நகல் ஆகியவையும் காணவில்லை. இது தொடர்பாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட ஆவணத்தை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரி மற்றும் தொலைபேசி எண்ணிற்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தொடர்பு முகவரி:**
**ராஜாம்மாள், க/பெ கலியபெருமாள்,**
**36A/3, மூன்றாவது குறுக்குத் தெரு, கல்யாணசுந்தரம் நகர், கருமண்டபம்,**
**திருச்சிராப்பள்ளி. மொபைல் எண்: 8870194605**


# "ஏன் உங்களை பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக அடையாளப்படுத்திக் கொள்கிறீர்கள்" – மோடியை சாடிய ராகுல் காந்தி



அம்பிகாபூர், நவ. 10–

பிரதமர் நரேந்திர மோடி தன்னை ஏன் ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக (OBC) அடையாளப்படுத்திக் கொள்கிறார் என்று முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

சத்தீஸ்கரில் மொத்தம் 90 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. அந்த மாநிலத்தில் முதல்கட்டமாக 20 தொகுதிகளுக்கு 7 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. மீதமுள்ள 70 தொகுதிகளுக்கு நவம்பர் 17–ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும். டிசம்பர் 3 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.

இந்த நிலையில், சத்தீஸ்கரின் அம்பிகாபூரில் நடந்த தேர்தல் பேரணியில் ராகுல் காந்தி கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது, "பிரதமர் மோடி ஒவ்வொரு மேடையிலும் பேசும்போது நான் ஒரு 'பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன்' என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறார். ஆனால் நான் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பற்றிப் பேசும்போது, இந்தியாவில் சாதியே கிடையாது. அதைத் தாண்டி சாதி இருக்கிறதென்றால், அது ஏழை என்ற ஒரேயொரு சாதிதான் என்று சொல்கிறார். பிறகு ஏன் பிரதமர் மோடி தன்னை ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக (OBC) அடையாளப்படுத்திக் கொள்கிறார்?

கறுப்புப் பணம், பணமதிப்பு நீக்கம் தொடர்பாகப் பிரதமர் மோடி அளித்த அனைத்து வாக்குறுதிகளும் பொய்யானவை. உங்களுக்கு ரூ.15 லட்சம் தருவதாக வாக்குறுதி அளித்தார். நீங்கள் அதைப் பெற்றுக் கொண்டீர்களா? பணமதிப்பிழப்பு நடவடிக்கையால் கறுப்புப் பணத்தை ஒழிக்கும் என்றார். அது நடந்ததா?

விவசாய மசோதாவால் விவசாயிகள் பயனடைவார்கள் என்றார். விவசாயிகளே அந்த மசோதாவை நிராகரித்தனர். யார் உண்மையைப் பேசுகிறார்கள், யார் பொய் சொல்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். சத்தீஸ்கர் மாநிலத்தில் கடந்த தேர்தலின்போது விவசாயிகளுக்கான கடன் தள்ளுபடி உள்ளிட்ட அனைத்து வாக்குறுதிகளையும் பூபேஷ் பாகல் தலைமையிலான காங்கிரஸ் அரசு நிறைவேற்றியது" என்றார்.

# புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் உணவுத் திருவிழா கோலாகலம்



புதுக்கோட்டை, நவ.10-

மௌண்ட் சீயோன் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, குழந்தைகள் தின விழாவினை முன்னிட்டு மாணவர்களிடம் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கினை வளர்க்கும் பொருட்டு உணவுத் திருவிழாவினை நடத்தினர், விழாவின் சிறப்பு விருந்தினராக, புதுக்கோட்டை மாவட்ட சட்ட சேவை அதிகாரி, மூத்த குடியியல் நடுவரும்,செயலாளருமான ராஜேந்திர கண்ணன், முன்னாள் தேசிய கால்பந்து அணியின் தலைவரான இராமன்விஜயன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டனர்.

மௌண்ட் சீயோன் பள்ளிகளின் தலைவர் ஜோனத்தன் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப்படுத்தி வரவேற்புரை வழங்கினார், மௌண்ட் சீயோன் பள்ளிகளின் துணைத் தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் உணவுத் திருவிழா ஆண்டு அறிக்கையை வாசித்தார், சிறப்பு விருந்தினர் பேசுகையில் பள்ளி நிர்வாகத்தின் இத்தகைய சிறப்பான முயற்சியைப் பற்றி வெகுவாகப் பாராட்டினார், மேலும் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு பகுதியாக இல்லாதோர்க்கு உதவி புரிந்து வாழக்கூடிய பழக்கத்தினை வளர்த்துக் கொள்ள வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

மாணவர்கள் இரு சக்கர வாகனத்தில் பாதுகாப்புடன் பயணிக்குமாறு வலியுறுத்தினார், மேலும் போதை மருந்துகளின் ஆபத்துகளைப் பற்றியும் கூறினார் . LKG முதல் 12-ம் வகுப்பு வரை மாணவர்கள் தங்கள் உணவினை சமைத்து விற்பனை செய்தனர், உணவு திருவிழாவில் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் அறுசுவை உணவினை உண்டு மகிழ்ந்தனர், மாணவர்களின் திறமைகளை அரங்கேற்றும் விதமாக சொற்பொழிவு , பாடல், நடனம் , மௌன மொழி நடிப்பு போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது, நிகழ்ச்சியின் நிறைவாக பள்ளிக்கல்வி முதல்வர் குமரேஷ் நன்றியுரை வழங்கினார், பள்ளியின் நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



▶ தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மனுக்கள் குழுவின் ஆய்வுக் கூட்டம் குழுவின் தலைவர் அரசு கொறடா கோவி செழியன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் கடலூர் ஐயப்பன், சூலூர் கந்தசாமி, சேர்ந்த மங்கலம் பொன்னுசாமி, விருத்தாச்சலம் ராதாகிருஷ்ணன், வாசுதேவ நல்லூர் சதன் திருமலை குமார், தென்காசி பழனி நாடார், மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் கட்டளை குடியிருப்பு, பூலாங்குடியிருப்பு சாலையை சீரமைக்க கேட்டு அளித்த மனு குறித்து நேரடியாக கள ஆய்வு மேற்கொண்டனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டம், புதுக்குடி கிராமத்தில், வருவாய்த்துறையின் சார்பில் நேற்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு, பெருங்கடன் உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்லி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் நா.கவிதப்பிரியா, மணமேல்குடி ஒன்றியக்குழுத் தலைவர் பரணி கார்த்திகேயன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் சீனியார், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் சுப்பிரமணியன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## கந்தர்வகோட்டை இல்லம் தேடிக் கல்வி மையத்தில்

# தன்னார்வலர்கள் தொடர்ந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் என அறிவுரை



கந்தர்வகோட்டை,நவ.10-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் வட்டார வளமையத்தில் இல்லம் தேடிக் கல்வி தன்னார்வலர்களுக்கு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் புதுக்கோட்டை கல்வி மாவட்ட உதவித் திட்ட அலுவலர் (தொடக்க கல்வி) கோவிந்தன் கற்பித்தல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசியதாவது

இல்லம் தேடிக் கல்வி மையம் கொரோனா காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளை சரி செய்ய ஏற்படுத்தப்பட்ட திட்டமாக தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் பணிபுரிந்து வரும் தன்னார்வலர்களில் சிறப்பாககற்பித்தல்பணிகளில் ஈடுபட்டு வருபவர்களுக்கு பாராட்டுக்களை தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வீரப்பன், புதுக்கோட்டை மாவட்ட இல்லம் தேடிக் கல்வித் திட்ட மாவட்ட ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் கலையரசன் ஆகியோர் தன்னார்வலர்களை வாழ்த்தி பேசினர், நிறைவாக கந்தர்வகோட்டை இல்லம் தேடி கல்வித் திட்ட ஒன்றிய ஆசிரிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா நன்றி கூறினார்.

# புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரி மாணவர்கள் கைப்பந்து போட்டிகளில் வெள்ளி பதக்கம் வென்று சாதனை



புதுக்கோட்டை,நவ.10-

சென்னை அண்ணா பல்கலைக் கழக 16வது மண்டல பொறியியல் கல்லூரிகளுக்கிடை ஆண்களுக்கான கைப்பந்து போட்டிகளில் செந்தூரான் பொறியியல் கல்லூரி மாணவர்கள் வெள்ளி பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

அண்ணா பல்கலைக் கழக 16வதுமண்டலஆண்களுக்கான கைப்பந்தாட்ட போட்டிகள் செந்தூரான் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது, இதில் புதுக்கோட்டை, மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளின் மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் இறுதி சுற்றில் புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் கல்லூரி மாணவர்களும் மற்றும் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர், அதில் செந்தூரான் பொறியியல் கல்லூரி மாணவர்கள் வெள்ளி பதக்கத்தை வென்றனர். இப்போட்டியில்வெள்ளிபதக்கம் வென்ற மாணவர்களுக்கு கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ், துணைத்தலைவர் சோம. நடராஜன், மேலாண்மை இயக்குநர் ஆர்.வயிரவன்,செயலர் டி. தியாகராஜன், முதன்மைச் செயல் அதிகாரி ஏவிஎம்.எஸ். கார்த்திக் நிர்வாக இயக்குநர் எம். பண்டரிகிருஷ்ணன் மற்றும் கல்லூரியின் முதல்வர் கே. கணேஷ்பாபு ஆகியோர் பாராட்டி கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கி ஊக்கப்படுத்தினர்கள், இம்மாணவர்களுக்கு பயிற்சி அளித்த உடற்கல்வி இயக்குநர் ஆர். அன்பரசன் பாராட்டினார்.

# தீர்ப்பு எதிரொலி : அதிமுக கொடி இல்லாமல் காரில் வலம் வரும் ஓபிஎஸ்



சென்னை, நவ. 10-

சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பையடுத்து அதிமுகவின் கொடியை தனது காரில் பயன்படுத்தாமல் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வலம் வருகிறார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வழக்கு தொடர்ந்த நிலையில், அ.தி.மு.க.வின் கொடி, பெயர், இரட்டை இலை சின்னம் ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்திற்கு சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்திருக்கிறது. இந்த நிலையில் கடந்த ஒரு வார காலமாக சிங்கப்பூருக்கு சென்றிருந்த, ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் இரவு சிங்கப்பூரில் இருந்து விமானம் மூலம் சென்னை திரும்பினார்.

அவருக்கு சென்னை விமான நிலையத்தில் அவரது ஆதரவாளர்கள், அ.தி.மு.க. கொடி இல்லாமல் வரவேற்பளித்தனர். அதன் பின்பு வழக்கமாக ஓ.பன்னீர்செல்வம் பயன்படுத்தும் காரில் அ.தி.மு.க.வின் கட்சி கொடி இல்லாமல், சென்னை விமான நிலையத்திலிருந்து, கிரீன்வேஸ் சாலையில் உள்ள தனது இல்லத்துக்கு அவர் புறப்பட்டு சென்றார். இதையடுத்து ஓ.பன்னீர்செல்வம் தன் ஆதரவாளர்களுடன் சென்னையில் கலந்து ஆலோசித்தார்.

அதோடு இன்று உயர் நீதிமன்ற தனி நீதிபதி வழங்கிய தீர்ப்பை எதிர்த்து ஓ.பன்னீர்செல்வம் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வு முன்பு விசாரணைக்கு வர உள்ளது.

# பிரதமர் மோடி குறித்து ஆய்வு முனைவர் பட்டம் பெற்ற முஸ்லிம் பெண்




வாரணாசி : நவ. 10,

நாட்டிலேயே முதன்முறையாக இஸ்லாமியப் பெண் ஒருவர், பிரதமர் மோடியைப் பற்றிய ஆய்வில் முனைவர் பட்டம் முடித்திருக்கிறார்.

வாரணாசி லல்லாபுரா பகுதியைச் சேர்ந்தவர், நஜ்மா பர்வீன். நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவரான இவர், பல ஆண்டுகளுக்கு முன்பே தனது பெற்றோரை இழந்துவிட்டார்.

2014ம் ஆண்டு பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் சேர்ந்த நஜ்மா பர்வீன், விஷால் பாரத் சன்ஸ்தான் எனும் அரசு சாரா அமைப்பின் நிறுவனரான பேராசிரியர் ராஜீவ் ஸ்ரீவஸ்தவாவின் நிதியுதவியுடன் தனது முனைவர் பட்ட ஆராய்ச்சியை மேற்கொண்டார். சுமார் 8 ஆண்டுகள் அரசியல் அறிவியல் துறையில், மோடியைப்பற்றி ஆராய்ச்சியை மேற்கொண்ட இவர், 'நரேந்திர மோடியின் அரசியல் தலைமை : ஒரு பகுப்பாய்வு ஆராய்ச்சி என்ற தலைப்பில் தனது முனைவர் பட்ட ஆராய்ச்சியை முடித்துள்ளார்.

இந்த ஆய்வறிக்கை 5 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளன எனவும், இதற்காக பிரதமர் மோடியின் வாழ்க்கை வரலாறுகள் உட்பட 20 இந்தி புத்தகங்கள், 79 ஆங்கிலப் புத்தகங்கள், 37 பத்திரிகை இதழ்கள் ஆகியவற்றிலிருந்து குறிப்புகள் எடுத்ததாகவும் நஜ்மா தெரிவித்துள்ளார். மேலும், இந்த ஆராய்ச்சிக்காக, மோடியின் சகோதரர் பங்கஜ் மோடி, ஆர்எஸ்எஸ் தலைவர் இந்திரேஷ் குமார் ஆகியோரையும் இவர் சந்தித்திருக்கிறார்.

இதுகுறித்து நஜ்மா பர்வீன், "பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தின் முதலமைச்சராக இருந்தபோது அம்மாநிலத்தின் வளர்ச்சியை உருவாக்கினார். அவரது புகழ் அதிகரித்து நாட்டின் பிரதமரானார். 2014 பொதுத்தேர்தல் நாட்டின் ஒட்டுமொத்த அரசியலையும் மாற்றியது. பாஜகவின் வெற்றி தேசிய அரசியலில், பிராந்தியக் கட்சிகளின் செல்வாக்கைக் கணிசமாகக் குறைத்தது.

ஒரு பிரதமராக, சுறுசுறுப்பாகச் செயல்படத் தொடங்கிய மோடி, நாட்டின் வளர்ச்சிக்காகவும், ஏழைகளின் நலனுக்காகவும் பல முடிவுகளை எடுத்தார். அதனால்தான் இந்த தலைப்பைத் தேர்ந்தெடுத்தேன். ஆரம்பத்தில் சிலர் என்னுடைய முடிவை எதிர்த்தனர். ஆனாலும், என்னுடைய முடிவில் உறுதியாக இருந்து, தொடர்ந்து ஆராய்ச்சி மேற்கொண்டேன்" எனத் தெரிவித்துள்ளார்.

மோடியைப்போலவே அரசியல்வாதியாக வேண்டும் என்ற லட்சியம் கொண்டவர் எனக் கூறப்படும் நஜ்மா பர்வீன், பாரதிய அவாம் கட்சி என்ற பெயரில் அரசியல் கட்சியை ஆரம்பித்து, அதற்கு அவரே தலைவராகவும் இருக்கிறார். மேலும், முத்தலாக்கிற்கு எதிரான இயக்கத்தில் பர்வீன் தீவிரமாக செயல்பட்டு வருகிறார். இந்த நடைமுறைக்கு எதிராக மோடி அரசு சட்டம் இயற்றியபோது, பிரதமருக்கு நன்றி தெரிவித்த முதல் முஸ்லிம் பெண்களில் இவரும் ஒருவர்.

# கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கான போனஸ் தொகையை 20%-ஆக உயர்த்தி வழங்கிடுக

## அரசுக்கு இபிஎஸ் வலியுறுத்தல்



சென்னை, நவ. 10-

கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2023-ஆம் ஆண்டுக்கான தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகையை 20 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும். 2021-ஆம் ஆண்டு முதல் 20 சதவீத ஊதிய உயர்வுக்கு குறையாமல் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும், என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எனது தலைமையிலான அதிமுகவின் ஆட்சியில் கொரோனா பெருந்தொற்றுக்கு முன்பு, 2016-ம் ஆண்டு முதல் 2019-ம் ஆண்டுவரை தமிழக அரசின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் (கூட்டுறவுத்துறை மற்றும் வனத் துறை உட்பட) தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகையாக 20 சதவீதம் வழங்கப்பட்டது. எனவே, 2022-2023ம் ஆண்டுக்கான அரசின் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் தீபாவளி போனஸ் மற்றும் கருணைத்தொகையாக 20 சதவீதம் வழங்கவேண்டும் என திமுக அரசை வலியுறுத்தினோம்.

அதிமுகவின் அண்ணா தொழிற்சங்கத்தினரின் கோரிக்கையை ஏற்று, திமுக அரசும் இந்த ஆண்டு தமிழக அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு 20 சதவீதம் போனஸ் மற்றும் கருணைத் தொகையை வழங்க அறிவிப்பு வெளியிட்டுள்ளது. ஆனால், கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கு மட்டும் இந்த ஆண்டு தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகையாக 10 சதவீதம் மட்டுமே வழங்கப்படும் என்று 7.11.2023 அன்று திமுக அரசு அறிவித்துள்ளது.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று இந்தியாவிலேயே தமிழ் நாடு கூட்டுறவுத் துறை சிறப்பான இடத்தை வகிப்பதோடு, இந்திய அளவில் பல முதல் பரிசுகளைப் பெற்றுள்ளது மற்றும் லாபத்தில் இயங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மாநில அரசின் வேளாண் நலத் திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவுத்துறை மூலமே தமிழக விவசாயிகளைச் சென்றடைகிறது. மேலும், கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரை தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகை அந்தந்த வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் நிதியில் இருந்துதான் ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது. அரசின் நிதியில் இருந்து போனஸ் வழங்கப்படுவதில்லை.

கடந்த பல ஆண்டுகளாக, அனைத்து கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் லாபத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்நிலையில் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களுக்கும் 20 சதவீத தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகையாக அறிவித்துவிட்டு, கூட்டுறவுத் துறைக்கு மட்டும் 10 சதவீதம் மட்டுமே அறிவித்துள்ளதைப் பார்க்கும்போது, ஒரு கண்ணில் சுண்ணாம்பும், மறு கண்ணில் வெண்ணெய்யுமாக இந்த திமுக அரசின் நிர்வாகத் திறனற்ற பொம்மை முதல்வர் செயல்படுகிறாரோ என்ற சந்தேகம் எழுகிறது.

மேலும், 1.1.2021 முதல் ஏற்படுத்தப்பட வேண்டிய அனைத்து மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கப் பணியாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம், கடந்த 34 மாதங்களாக நடைமுறைப்படுத்தப்படாமல் இந்த திமுக அரசு காலதாமதம் செய்து வருவது கூட்டுறவுத்துறை ஊழியர்களிடையே பெரும் ஏமாற்றத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

ஆட்சிக்கு வந்த நாள் முதல் கூட்டுக்கொள்ளை அடிப்படையிலேயே குறியாக இருக்கும் இந்த திமுக ஆட்சியாளர்கள், வேளாண் பெருமக்கள் மற்றும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டுக்காகப் பாடுபடும் கூட்டுறவு சங்க ஊழியர்களின் வயிற்றில் அடிப்பதை உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும் அதிமுக சார்பில் வலியுறுத்துகிறேன்.

எனவே, உடனடியாக கூட்டுறவு வங்கிப் பணியாளர்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு 2023-ஆம் ஆண்டுக்கான தீபாவளி போனஸ் மற்றும் கருணைத் தொகையை 20 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்றும்; அதிமுக ஆட்சியில் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் வழங்கியது போல், 2021-ஆம் ஆண்டு முதல் 20 சதவீத ஊதிய உயர்வுக்கு குறையாமல் புதிய ஊதிய உயர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

## குற்றப் பின்னணி கொண்ட

# எம்பி,எம்எல்ஏக்கள் குறித்த வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும் : உச்சநீதிமன்றம்



டெல்லி, நவ. 10-

குற்றப் பின்னணி கொண்ட எம்பி, எம்எல்ஏக்கள் குறித்த வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று சிறப்பு நீதிமன்றங்களுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் பின்னணி கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான வழக்குகளை விரைந்து விசாரிக்க வேண்டும் எனவும் எம்பிக்கள், எம்எல்ஏக்கள் குற்றவாளிகள் என தீர்ப்பு அளிக்கப்பட்டால் அவர்கள் வாழ்நாள் முழுவதும் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கவேண்டும்எனவும் கூறி பாஜக வழக்கறிஞர் அஷ்வினி உபதயாயா உச்சநீதிமன்றத்தில் பொது நல மனு ஒன்றை தாக்கல் செய்து இருந்தார். இந்த வழக்கில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 3 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து வருகிறது.

அப்போது நீதிபதிகள் குற்றப்பின்னணி கொண்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்த வழக்குகளை சிறப்பு நீதிமன்றங்கள் விரைந்து விசாரிக்க வேண்டும் என்றும் வழக்கு விசாரணையை விரைந்து முடிக்க தேவையான நடவடிக்கைகளை கீழமை நீதிமன்றங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். மேலும் வழக்கை விரைந்து முடிக்கும் விதமாக அந்தந்த மாநில உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் தாமாக முன்வந்து தங்கள் தலைமையில் சிறப்பு அமர்வை உருவாக்கி விசாரிக்க வேண்டும் எனவும் உத்தரவில் தெரிவித்தனர். குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் வாழ்நாள் முழுவதும் தடை விதிக்க வேண்டும் என கோரிக்கை குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தப்படும் எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

## சங்கரன்கோவிலில் தீபாவளியை முன்னிட்டு

# மனவளர்ச்சி குன்றியோர் பள்ளியில் சிறப்பு குழந்தைகளுக்கு புத்தாடைகளை எம்எல்ஏ ராஜா வழங்கினார்



சங்கரன்கோவில், நவ.10-

சங்கரன்கோவில் அண்ணாநகர் பகுதியில் உள்ள தமிழ் மலர் சிறப்பு குழந்தைகள் பள்ளியில் உள்ள 25 சிறப்பு குழந்தைகளுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தென்காசி திமுக வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ பள்ளிக்கு நேரில் சென்று புத்தாடைகளை வழங்கினார்.

இதில் மாவட்டப் பொருளாளர் சரவணன், குருவிகுளம் ஒன்றிய செயலாளர் கடற்கரை, நகரச் செயலாளர் பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்தி, மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மாரிகுட்டி ,ஜான் ஆகியோர் கலந்து கொண்டனர், பள்ளி நிறுவனர் ஜீவிதா சிறப்பு குழந்தைகளுக்கு புத்தாடைகள் வழங்கிய வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.



▶ காரைக்காலில் அமைந்துள்ள அவ்வையார் அரசு மகளிர் கல்லூரி வளாகத்தில் ஆங்கிலத் துறையில் இணையதள வசதி கொண்ட கணினி தொடு திரை அமைக்கப்பட்டது. மாணவிகளின் கல்வி மற்றும் அறிவுத்திறனை மேம்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இத்தொடுதிரையை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் பாலாஜி மற்றும் பேராசிரியர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வரலாறு விளையாட்டு

# பேட்டிங்கில் ‘கேப்டன்’ ரோகித் சர்மாவின் அசாத்திய பங்களிப்பு – ஒரு பார்வை



**விளையாட்டு செய்தி : நவ. 10,**

**2023 உலகக் கோப்பை இதுவரை இல்லாத அளவுக்கு இந்திய அணிக்கு அமைந்துள்ளது. ஒருநாள் போட்டிகளில் முதல் முறையாக ‘இன்வின்சிபிள்ஸ்’, அதாவது தோற்கடிக்கப்பட முடியாத அணி என்று இந்திய அணி பெயர் எடுத்துள்ளது.**

லீக் சுற்றில் 4-ம் இடத்தை பிடிக்கும் அணி இந்திய அணியுடன் அரையிறுதியில் மோத வேண்டும். இதனால், 4-ம் இடத்தில் முடிந்துவிடக் கூடாது என்று ஒவ்வொரு அணிகளிடமும் போட்டி நிலவுகிறது, காரணம் இந்திய அணியின் பலம் அப்படி!

இந்த நிலைக்கு இந்தியாவின் பந்து வீச்சு முக்கியமான காரணம் என்றாலும், ரோகித் சர்மாவின் ரிஸ்க்கான அதிரடி ஆட்டத்தின் பங்களிப்பும் முக்கியம் என்றால் மிகையாகாது. இந்த உலகக் கோப்பையில் இதுவரை ரோகித் சர்மாதான் முதல் 10 ஓவர்கள் பவர் ப்ளேயில் அதிக ரன்களை வெகு விரைவாக எடுத்துள்ளார் என்கின்றன புள்ளி விவரங்கள். அதேபோல், இந்த உலகக் கோப்பையில் இதுவரை அதிக சிக்ஸர்களையும் பவுண்டரிகளையும் அடித்தவரும் அவரே.

ரோகித் சர்மா ஒரு கேப்டனாக பொறுப்பை எடுத்துக் கொண்டு ஆடுகிறார். குறிப்பாக, அதிரடி ஆட்டத்தை இளம் வீரர்களிடத்தில் கொடுத்து தான் சவுகரியமான ஒரு போக்கில் ஆடுவதை அவர் விரும்பவில்லை. ‘தானே அதிரடி ஆட்டம் ஆடுவேன், ரிஸ்க் எடுப்பேன்’ என்று விளையாடி, அதில் இதுவரை வெற்றியும் அடைந்துள்ளார். 2011 உலகக் கோப்பைக்குப் பிறகு கடந்த 10-12 ஆண்டுகளில் இந்திய அணி டாப் 3 ஒருநாள் அணிகளில் இருந்து வருகின்றது. இதற்கு காரணம் தோனி போன பிறகு விராட் கோலி, ரோகித் சர்மா உள்ளிட்ட பல தரமான வீரர்கள், குறிப்பாக பவுலர்கள் இந்திய அணியை அலங்கரித்து வருகின்றனர்.

உலகக் கோப்பைக்கு முன்பாக ராகுல் திராவிட் மேல் கடும் அதிருப்தியும் விமர்சனங்களும் ரசிகர்களிடம் இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால், விமர்சனங்களைத் தாண்டி, கிரேக் சேப்பல் பாணியில் வீரர்களை அவரவருக்குப் பாதுகாப்பாக இருந்து கொண்டிருந்த பிராந்தியத்திலிருந்து அவர்களை வெளியே கொண்டு வந்தது ராகுல் திராவிட்தான். அதாவது, முன்பெல்லாம் விக்கெட்டை இழப்பதற்கு இந்திய வீரர்கள் அஞ்சுவார்கள். ரன் ரேட்டைப் பற்றி கவலைப்படாமல் தங்கள் விக்கெட், சராசரி மீதே அதிக கவனம் கொண்டிருப்பார்கள். ஆனால், இந்த உலகக் கோப்பையில் அது முடிவுக்கு வந்துள்ளது. முதலில் இத்தகைய தற்காப்பு பிராந்தியத்தில் இருந்த ரோகித் சர்மா தானே பொறுப்பேற்றுக் கொண்டு அதிரடியை தொடங்கி வைத்து தன்னை அனைவரும் பின்பற்றுமாறு செய்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு அடுத்தபடியாக பவர் ப்ளேயில் இந்தியா சிறப்பாக இருக்கிறது என்றால், அங்கு டிராவிஸ் ஹெட், இங்கு ரோகித் சர்மாதான். ஆனால், உலகக் கோப்பைக்காக இந்த உத்தியை வகுக்கவில்லை என்கிறார் பேட்டிங் பயிற்சியாளர் விக்ரம் ராத்தோர். அதிக ரன்களை அடிக்க வேண்டும். முடிந்தவரையில் ஸ்கோரிங் வாய்ப்புகளை பயன்படுத்தி அதிக ஸ்கோரை எட்ட வேண்டும் என்பது மட்டும்தான் திட்டம். அதாவது, பிட்ச் பெல்ட்டர் பிட்சாக இருந்தால், அடித்து நொறுக்குவது என்று ஆடுகின்றனர். முன்பு அப்படி அல்ல, ஒருவர் நிற்பது ஒருவர் அடிப்பது, விக்கெட்டைப் பாதுகாத்து வைத்து கடைசியில் அடிப்பது என்று இருந்தனர். இப்போது அது முற்றிலும் மாறிவிட்டது, யாராக இருந்தாலும் அடிக்க வேண்டியதுதான்.

ரோகித் இந்த முறையில் ஆடுவதினால் பின்னால் வரும் வீரர்களுக்கு பிரஷர் குறைகிறது. குறிப்பாக விராட் கோலி ரன் ரேட் பற்றிக் கவலைப்படாமல் ஆட முடிகிறது, தன் சொந்த சாதனையைக் கூட எட்ட முடிகிறது, அணியின் நோக்கங்கள் பாதிக்காமல் செயல்பட முடிகிறது என்றால், அதற்குக் காரணம் ரோகித் சர்மாவின் தொடக்க அதிரடியே. அதனைத் தான், ‘மற்ற வீரர்கள் எப்படி ஆட வேண்டும் என்பதை தன் ஆட்டத்தின் மூலம் காட்டுபவர் ரோகித்’ என்கிறார் விக்ரம் ராத்தோர். அதுதான் ரோஹித் சர்மா கேப்டன்சியின் வெற்றியும் கூட!

# ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்

## அடுத்தடுத்து தங்கம் வென்று அசத்தும் இந்திய அணி



**பாங்காக் : நவ. 10,**

**பாங்காக்கில் நடந்து வரும் ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் ஜோதி, பர்னீத் மற்றும் அதிதி அடங்கிய இந்திய மகளிர் அணி, சீனாவை வீழ்த்தி தங்கம் வென்றது. கலப்பு பிரிவிலும் இந்திய அணி தங்கம் வென்றது.**

தாய்லாந்தில் ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப் போட்டி நடக்கிறது. காம்பவுண்டு மகளிர் பிரிவில் இந்தியாவின் ஜோதி, பர்னீத் மற்றும் அதிதி அடங்கிய இந்திய மகளிர் அணி, சீனாவை வீழ்த்தி தங்கம் வென்றது.

நேற்று முன்தினம் புதன்கிழமை காம்பவுண்டு கலப்பு பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் அதிதி, பிரியான்ஷ் ஜோடி, கஜகஸ்தானின் அடெல், ஆன்ட்ரே ஜோடியை சந்தித்தது. முதல் செட்டில் இந்திய ஜோடி 38-39 என பின்தங்கியது. அடுத்த செட் 40-40 என சமநிலை ஆனது.

நான்காவது செட்டில் இந்தியா 40-39 என முன்னிலை பெற, ஸ்கோர் 118-118 என ஆனது. கடைசி செட்டில் இந்திய ஜோடி சிறப்பாக செயல்பட 39-37 என ஆதிக்கம் செலுத்தியது. முடிவில் இந்திய ஜோடி 157-155 என்ற கணக்கில் வெற்றி பெற்று, பைனலுக்கு முன்னேறியது.

அதேபோல, வில்வித்தை கலப்பு பிரிவில் அதிதி கோஸ்வாமி மற்றும் பிரியன்ஸ் ஆகியோர் கலந்துகொண்டு 156 - 151 என்ற புள்ளி கணக்கில் வெற்றிபெற்று அசத்தினர்.

# இது ஐசிசி உலகக் கோப்பை, உள்ளூர் போட்டி அல்ல

## பாகிஸ்தான் முன்னாள் வீரருக்கு ஷமி பதிலடி



**மும்பை : நவ. 10,**

**“இந்திய வீரர்களுக்கு ஐசிசி உதவுகிறது. இந்திய பவுலர்களுக்கு வழங்கப்பட்ட பந்துகளை சோதிக்க வேண்டும்” என்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் ஹசன் ராசா கூறிய கருத்துக்கு இந்திய வீரர் மொகமது ஷமி பதிலடி கொடுத்துள்ளார்.**

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற உலகக் கோப்பை தொடரின் 33-வது ஆட்டத்தில் இந்தியா 302 ரன்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. முதலில் பேட் செய்த இந்தியா 8 விக்கெட் இழப்புக்கு 357 ரன்கள் குவித்தது. இரண்டாவது பேட் செய்த இலங்கை 55 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. மொகமது ஷமியின் 5 விக்கெட், சிராஜ் 3 விக்கெட் என இந்தியாவின் வெற்றிக்கு முக்கிய பங்களிப்பு செய்தனர். இந்தப் போட்டிக்கு பிறகு இந்தியாவின் வேகப்பந்து வீச்சு வெகுவாக பாராட்டப்பட்டு வருகிறது. வேகப்பந்து வீச்சு ஜாம்பவான்கள் வாசிம் அக்ரம், சோயப் அக்தர் உட்பட பல முன்னாள் வீரர்களும், இந்தியாவின் ஷமி, சிராஜ், பும்ரா ஆகிய மூவர் இணையை கொண்டாடியுள்ளனர்.

அதேவேளையில், பாகிஸ்தான் தொலைக்காட்சி ஒன்றில் கிரிக்கெட் தொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அந்நாட்டின் முன்னாள் வீரர் ஹசன் ராசா, “இந்தியாவின் பந்துவீச்சாளர்களுக்கு கொடுக்கப்பட்ட பந்துகளை சோதனை செய்ய வேண்டும். அவர்களுக்கு வழங்கப்பட்ட பந்துகளில் இருந்து மட்டும் அதிக ஸ்விங் மட்டும் ஸீம் கிடைக்கிறது. ஷமி மற்றும் சிராஜ் இருவரும் ஆலன் டொனால்ட் மற்றும் மகாயா நிடினி போல் பந்துவீசுகின்றனர். ஷமியின் பந்துவீச்சில் ஏற்பட்ட ஸ்விங் குறித்து மேத்யூஸ் கூட ஆச்சரியப்பட்டார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) இந்தியாவுக்கு வித்தியாசமான பந்துகளைக் கொடுத்து உதவி செய்கிறது. அல்லது பிசிசிஐ தனது வீரர்களுக்கு உதவிவருகிறது என நினைக்கிறேன். இதில் மூன்றாவது நடுவரின் தலையீடும் இருக்கலாம்” என இந்தியாவின் வேகப்பந்து வீச்சு குறித்து சர்ச்சைக்குரிய வகையில் கருத்து தெரிவித்தார்.

இதற்கு எதிர்ப்புகள் கிளம்பின. எனினும், தொடர்ந்து இதேபோன்று கருத்தை அவர் தெரிவித்தார். இதனிடையே, ஹசன் ராசாவின் கருத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்திய வீரர் மொகமது ஷமி கருத்து பதிவிட்டுள்ளார். தனது இன்ஸ்டாகிராம் ஸ்டோரியில், “உங்களை நினைத்து வெட்கப்படுகிறேன். சில நேரங்களில் மற்றவர்களின் வெற்றியை அனுபவிக்க முயற்சி செய்யுங்கள். இது ஐசிசி உலகக் கோப்பை. உள்ளூர் போட்டி ஒன்றும் அல்ல. நீங்களும் ஒரு காலத்தில் கிரிக்கெட் வீரராக இருந்தீர்கள், இல்லையா?. வாசிம் அக்ரம் எல்லாவற்றையும் விளக்கியபோதும், உங்களுக்கு இன்னும் புரியவில்லை. உங்கள் சொந்த நாட்டின் வீரர் வாசிம் அக்ரமைக் கூட நீங்கள் நம்பவில்லை. என்னைப் பொறுத்தவரை இதுபோன்ற பொருத்தமற்ற விஷயங்களையோ அல்லது முட்டாள்தனத்தைப் பற்றி கவலைப்படாமல் விளையாட்டில் கவனம் செலுத்த வேண்டும்” எனக் காட்டமாக பதிவிட்டுள்ளார் ஷமி.

# ஷகிப் அல் ஹசன் இலங்கை வந்தால் கல்லால் அடித்து துரத்துவோம்

## மேத்யூஸின் சகோதரர் ஆவேசம்





**இலங்கை : நவ. 10,**

**உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் வங்கதேச அணியின் கேப்டன் ஷகிப் அல் ஹசன் நடந்துக் கொண்ட விதம் மிகவும் கண்டிக்கத்தக்கது என்றும் அவர் இலங்கை வந்தால் கல்லால் அடித்து துரத்துவோம் என்றும் இலங்கை அணி வீரர் மேத்யூஸின் சகோதரர் ஆவேசமாக பேசியுள்ளார்.**

வங்கதேசம் - இலங்கை அணிகள் இடையே ஆன உலகக்கோப்பை லீக் போட்டியில் இலங்கை அணி பேட்டிங் செய்த போது ஏஞ்சலோ மேத்யூஸ் களத்துக்கு தாமதமாக வந்தார். அதன் பின்னும் அவர் ஹெல்மெட் சரியில்லை என மேலும் தாமதம் செய்ததால் விதிப்படி புதிய பேட்ஸ்மேன் பேட்டிங் செய்ய நேரம் கடத்தியதற்காக டைம் அவுட் கோரினார் ஷகிப் அல் ஹசன். அம்பயர் அவுட் கொடுத்தார்.

பொதுவாக விதிப்படி இது அவுட் என்றாலும் எதிரணிகள் இது போன்ற நியாயமான காரணங்களால் தாமதம் ஆனால் அவுட் கேட்க மாட்டார்கள். ஆனால், ஷகிப் அல் ஹசன் அவுட் கேட்டதால் பெரும் சர்ச்சை வெடித்தது. சிலர் மேத்யூஸ் செய்தது தவறு எனக் கூறினாலும், சிலர் ஷகிப் அல் ஹசன் அவுட் கேட்டு இருக்கக் கூடாது என அவரை விமர்சனம் செய்தனர்.

இந்த சம்பவம் நடந்த பின் இலங்கை - வங்கதேச வீரர்கள் இடையே வார்த்தை மோதல்கள் நடந்தன. போட்டிக்கு பின் இலங்கை வீரர்கள் கை குலுக்க வரவில்லை. இந்த நிலையில், அதற்கு மறுநாள் ஷகிப் அல் ஹசன் உலகக்கோப்பை தொடரில் இருந்து விலகினார். இந்த நிலையில், ''உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் வங்கதேச கேப்டன் நடந்துக் கொண்ட விதம் மிகவும் கண்டிக்கத்தக்கது. அவர் இலங்கை வந்தால் கல்லால் அடித்து துரத்துவோம்” என மேத்யூஸின் சகோதரர் ஆவேசமாக பேசியுள்ளார்.

வரலாறு சினிமா

# என் பேய் பட இமேஜை ‘ஜிகர்தண்டா 2’ உடைக்கும் ராகவா லாரன்ஸ் நம்பிக்கை



**சென்னை : நவ. 10,**

**எஸ்.ஜே.சூர்யா, ராகவா லாரன்ஸ் நடித்துள்ள படம், ‘ஜிகர்தண்டா-டபுள் எக்ஸ்’. கார்த்திக் சுப்புராஜ் இயக்கியுள்ள இந்தப் படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசை அமைத்துள்ளார். திருநாவுக்கரசு ஒளிப்பதிவு செய்துள்ளார். தீபாவளியை முன்னிட்டு இன்று வெளியாக இருக்கும் இந்தப் படம் பற்றி நடிகர் ராகவா லாரன்ஸ் கூறியதாவது:**

இது கேங்ஸ்டர் கதை. பழங்குடி பின்னணியில் உருவாகி இருக்கிறது. எஸ்.ஜே.சூர்யா இயக்குநராக நடித்திருக்கிறார். 1975-ம் ஆண்டில் நடக்கும் கதை என்பதால் அந்தக் காலகட்டத்து உடைகள் போல் அணிந்து நடித்தது புதிதாக இருந்தது. பிரபலமாக இருக்கிற ஒரு ரவுடி, கலைத்துறைக்குள் வரும் போது என்ன மாற்றம் நடக்கிறது என்பது கதை. அந்த மாற்றம் அழுத்தமாகவும் வலி நிறைந்ததாகவும் இருக்கும். கடைசி 20 நிமிடம் படம் வேறு மாதிரி இருக்கும்.

படம் முடிந்து வெளியே வரும்போது நல்ல படம் பார்த்த திருப்தியோடு மக்கள் வருவார்கள். ‘ஜிகர்தண்டா’ நான் நடிக்க வேண்டிய படம். அந்தக் கதையை என்னிடம்தான் கார்த்திக் சுப்புராஜ் சொன்னார். அப்போது நான் தெலுங்கு படத்தில் நடித்துக் கொண்டிருந்ததால் அதில் நடிக்க முடியவில்லை. அதனால் இதில் நடிக்க நானாகத்தான் கேட்டேன். நிமிஷா சஜயன் நடிப்பில் மிரட்டியிருக்கிறார். அவருடன் நடிக்கும் போது கவனமாக இருந்தேன். இந்தப் படத்தில் என் கேரக்டருக்கு ‘ரெஃபரன்ஸ்’ இல்லை.

இதுமாதிரி கேரக்டரை முன்பு பார்த்ததுமில்லை. மதுரை ஸ்லாங்கில் பேசி நடித்திருக்கிறேன். எஸ்.ஜே.சூர்யாவுடன் நடித்தது சிறப்பாக இருந்தது. நான் டான்ஸ் படம், ஆக்‌ஷன் படம் எல்லாம் முயற்சிசெய்துவிட்டு, பேய் படம் பண்ணினேன். வழக்கமாக பேய் படம் என்றால் பயம் மட்டும்தான் இருக்கும். அதில் ஒரு மெசேஜ் சொல்லி காமெடி சேர்த்து பண்ணலாம் என்று முயற்சி செய்த படம் ‘முனி’. அது ‘காஞ்சனா’வில் நன்றாக ஒர்க் அவுட் ஆனது. பேய் படம் பண்ணினால்தால் வெற்றி பெற முடியும் என்ற இடத்துக்கு அது என்னைக் கொண்டு வந்து நிறுத்தியது. எனக்கு இருக்கும் அந்த பேய் பட இமேஜை இந்தப் படம் உடைக்கும் என்று ராகவா லாரன்ஸ் கூறினார்.

# “மூன்று பாதிப்புகளும், மீளும் போராட்டங்களும்” நடிகை சமந்தா அனுபவ பகிர்வு



**சினிமா செய்தி : நவ. 10,**

**“சோர்வான தருணங்களில் தோல்வியடைந்த திருமணம், உடல்நல பாதிப்பு, வேலையில் கவனம் செலுத்த முடியாமை ஆகிய மூன்றும் ஒன்று சேர்ந்து என்னை பாதிக்கும்” என்று நடிகை சமந்தா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் அளித்த பேட்டி ஒன்றில் “நான் எப்போதும் இல்லாத அளவுக்கு சோர்வாக உணரும் தருணங்களில் தோல்வியடைந்த திருமணமும், என்னுடைய உடல்நலமும், வேலையும் சேர்த்து என்னை பாதிக்கும். இந்த மூன்றும் ஒன்று சேர்ந்து தாக்கும். கடந்த 2 ஆண்டுகளாக நான் மிகவும் சோர்வுற்றிருந்தேன். இந்தக் காலக்கட்டத்தில் உடல்நலப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்த நடிகர்கள் பற்றியும், அவர்கள் எதிர்கொண்ட பதற்றம் மற்றும் விமர்சனங்கள் குறித்து படித்து தெரிந்துகொண்டேன். அவர்களின் இந்தக் கதைகள் எனக்கு மிகவும் உதவிகரமாக இருந்தது. அவர்களால் முடிந்தது, என்னாலும் முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. இந்த தேசத்தில் நீங்கள் நேசிக்கப்படும் ஒரு நட்சத்திரமாக இருக்கும்போது அதற்கு உண்மையாகவும், நேர்மையாகவும் இருக்க வேண்டும். அது உங்களுக்கு கிடைத்த பரிசு.

நீங்கள் எத்தனை சூப்பர் ஹிட் மற்றும் ப்ளாக் பஸ்டர் படங்களை கொடுத்தீர்கள், எத்தனை விருதுகளை வென்றுள்ளீர்கள் என்பதெல்லாம் கணக்கில்லை. வலியையும், கஷ்டங்களையும் தாண்டி மீண்டு வருகிறீர்களா என்பதுதான் முக்கியம். என்னுடைய தோல்விகள் பகிரங்கப்படுவதை நான் பொருட்படுத்துவதில்லை. உண்மையில் நான் முன்னேறிக் கொண்டிருக்கிறேன். என்னிடம் இருப்பதை வைத்து நான் போராடப் போகிறேன் என்பது எனக்குத் தெரியும். இதேபோன்ற சூழ்நிலையில் இருப்பவர்களும் என்னைப்போல தொடர்ந்து போராடும் வலிமையைப் பெறுவார்கள் என்று நம்புகிறேன்” என்று தன் அனுபவங்களை சமந்தா பகிர்ந்துள்ளார்.

# வரமா, சாபமா எனத் தெரியவில்லை வருத்தத்தில் கீர்த்தி சுரேஷ்



**சினிமா செய்தி : நவ. 10,**

**நடிகை ராஷ்மிகா மந்தனாவின் டீப் ஃபேக் வீடியோவிற்கு பலரும் எதிர்ப்பு தெரிவித்து அவருக்கு ஆறுதலாக குரல் கொடுத்து வரும் நிலையில் நடிகை கீர்த்தி சுரேஷும் இதுகுறித்து தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.**

நடிகை ராஷ்மிகாவின் முகத்தை வேறொரு பெண்ணின் வீடியோவில் டீப் ஃபேக் டெக்னாலஜி மூலம் மாற்றம் செய்து மர்மநபர்கள் வெளியிட்டனர். இந்த வீடியோ இணையத்தில் வைரலாக நடிகர்கள் அமிதாப் பச்சன், மிருணாள் தாக்கூர் உள்ளிட்டப் பலரும் இந்த வீடியோவிற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

நடிகை ராஷ்மிகாவும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்தார். இதுகுறித்து நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தி தனக்கு ஆதரவு தெரிவித்தவர்களுக்கு நன்றியும் கூறினார். இது மட்டுமல்லாது நடிகை கத்ரீனாவும் இது போன்ற மார்ஃபிங் புகைப்பட சர்ச்சையில் சிக்கினார். இதுபோன்ற மார்ஃபிங் புகைப்படங்களையும் வீடியோக்களையும் வெளியிட்டால் 3 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் என மத்திய அரசு எச்சரித்துள்ளது.

இந்த வீடியோவில் சம்பந்தப்பட்ட சாரா படேலும், ‘இந்த வீடியோவுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை’ எனவும் விளக்கம் கொடுத்து வருத்தம் தெரிவித்தார். இந்த நிலையில் நடிகை கீர்த்தி சுரேஷ் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், ‘இந்த டீப் ஃபேக் வீடியோ பயத்தைக் கொடுத்துள்ளது. இந்த வீடியோவை எடிட் செய்த நபர் அந்த நேரத்தைப் பயனுள்ளதாக மாற்றி இருக்க வேண்டும். தொழில்நுட்ப வளர்ச்சி வரமா சாபமா எனத் தெரியவில்லை. நிச்சயம் இதை நாம் பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டுமே தவிர இப்படி அல்ல’ எனச் சொல்லி ராஷ்மிகாவுக்கு தனது ஆதரவைக் கொடுத்துள்ளார்.

# விஜய்யின் ‘லியோ’ உலக அளவில் ரூ.600 கோடி வசூல்



**சென்னை : நவ. 10,**

**லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியாகி திரையரங்குகளில் திரையிடப்பட்டுக் கொண்டிருக்கும் ‘லியோ’ திரைப்படம் உலகம் முழுவதும் ரூ.600 கோடியை வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

‘மாஸ்டர்’ படத்துக்குப் பிறகு விஜய் - லோகேஷ் கனகராஜ் கூட்டணியில் உருவான ‘லியோ’ திரைப்படம் கடந்த அக்டோபர் 19-ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்தில் த்ரிஷா, கவுதம் வாசுதேவ் மேனன், அர்ஜுன், மன்சூர் அலிகான், சஞ்சய் தத், ப்ரியா ஆனந்த் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ளார். கலவையான விமர்சனங்களைப் பெற்று வரும் இப்படம் வெளியான முதல் நாளில் உலகம் முழுவதும் ரூ.148.5 கோடி வசூலை ஈட்டியதாக படத்தின் தயாரிப்பு நிறுவனம் அதிகாரபூர்வமாக அறிவித்திருந்தது. படம் வெளியாகி 12 நாட்களில் ரூ.540 கோடியை படம் வசூலித்ததாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து படத்தின் வசூல் வேகம் குறைந்தது.

எனினும், ‘லியோ’ ரிலீஸுக்குப் பிறகு பெரிய படங்கள் எதுவும் வெளியாகததால் வார இறுதி நாட்களில் வசூல் எண்ணிக்கை கூடியதையடுத்து, 21 நாட்களில் படம் ரூ.600 கோடியை வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. விஜய்யின் படங்களில் அதிகபட்ச வசூலை குவித்த படம் என்ற பெருமையுடன், தமிழ் சினிமாவில் அதிகபட்ச வசூலை குவித்த 3-ஆவது படம் என்ற அடையாளத்தையும் ‘லியோ’ பெற்றுள்ளது. இதில் ரஜினியின் ‘2.0’ ரூ.700 கோடிக்கும் அதிகமான வசூலுடன் முதலிடத்திலும், ‘ஜெயிலர்’ ரூ.650 கோடியுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

வரலாறு உலகம்

# "50,000 பேருக்கு 4 கழிவறைகள் மட்டுமே"

## காசாவில் பணியாற்றிய அமெரிக்க செவிலியரின் அதிர்ச்சி பகிர்வு



**டெல்லி : நவ. 10,**

**காசா நிவாரண முகாம்களில் பணிபுரிந்துவிட்டு கடந்த வாரம் அமெரிக்காவுக்குத் திரும்பிய செவிலியர் ஒருவர், தனது சக ஊழியர்கள் குறித்தும், தன்னுடைய பணி அனுபவம் குறித்தும் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.**

காசாவின் ஹமாஸ் படையினருக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் கடந்த அக்.7-ஆம் தேதி தொடங்கிய போர், 30 நாட்களைக் கடந்தும் நீடித்து வருகிறது. காசாவில் உள்ள தங்குமிடம், மருத்துவமனை மற்றும் ஆம்புலன்ஸ் உள்ளிட்டவற்றைக் குறிவைத்துத் தாக்கி வருகிறது இஸ்ரேல் ராணுவம். போர் கொடூரமடைந்து வரும் நிலையில், அங்குள்ள மக்களின் நிலை மோசமடைந்து வருகிறது.

இந்தநிலையில், காசாவில் பணிபுரிந்துவிட்டுக் கடந்த வாரம் அமெரிக்காவுக்குத் திரும்பிய செவிலியர் எமிலி கலாஹான் என்பவர் தனது சக ஊழியர்கள் குறித்து உருக்கமான அனுபவங்களை ஒரு தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியாக அளித்திருக்கிறார். அந்தப் பேட்டியில், "காசா நிவாரண முகாம்களில் தங்கி பணியாற்றும் சக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் தாங்கள் இறக்கப் போகிறோம் என்று தெரிந்தும், அந்த இடத்தில் தங்கி பணியாற்றுகிறார்கள். மக்களுக்காகச் சேவை செய்கின்றனர். அவர்கள்தான் நிஜமான ஹீரோக்கள்.

காசாவில் பாதுகாப்பான இடம் என்று ஒன்றுகூட கிடையாது. எங்களைச் சுற்றிலும் குண்டுகள் வெடித்தன. என்னுடன் பணியாற்றிய சில சக ஊழியர்கள் ஒரு நொடி கூட மக்களை விட்டு வெளியேறவில்லை. சில நாட்கள் கம்யூனிஸ்ட் பயிற்சி மையத்திலிருந்தோம். அங்கு சுமார் 35,000 பேர் இருந்தனர். அங்கிருந்த குழந்தைகளின் முகம், கழுத்து, கைகால் முழுவதும் தீக்காயங்கள் இருந்தன. மருத்துவமனைகள் நிரம்பி இருந்ததால், அவர்கள் சிகிச்சை பெறாமல் அங்கேயே இருந்தனர். 50,000-க்கும் மேற்பட்ட மக்கள் தங்கியிருந்த ஒரு முகாமில் நான்கு கழிவறைகள் மட்டுமே இருந்தன. ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் தண்ணீர் விநியோகிக்கின்றன.

மருத்துவமனைக்கு வெளியே உள்ள ஒரு ஆம்புலன்ஸ் வெடித்ததில் என்னுடைய சக ஊழியர் கொல்லப்பட்டார். காசாவை விட்டு வெளியேறுவதற்கான உத்தரவு வந்தபோது, நான் என்னுடைய சக ஊழியர்களுக்கு 'என்னுடன் யாராவது வருகிறீர்களா' என்று கேட்டு மெசேஜ் அனுப்பினேன். ஆனால் எனக்குக் கிடைத்த ஒரே பதில், 'இது எங்கள் சமூகம். இது எங்கள் குடும்பம். இவர்கள் எங்கள் நண்பர்கள் அவர்கள் எங்களைக் கொல்லப் போகிறார்களானால், எங்களால் முடிந்தவரைப் பலரைக் காப்பாற்றிவிட்டு நாங்கள் இறக்கப் போகிறோம்" என்று கூறினார்கள். அவர்களின் பதில் எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

இப்போது நான் என்னுடைய சக ஊழியர்களின் பாதுகாப்பு குறித்து ஒவ்வொரு நாளும் கவலைப்படுகிறேன். நான் தினமும் காலையிலும், இரவிலும் என்னுடைய சக ஊழியர்களுக்கு ஒரு குறுஞ்செய்தி அனுப்புகிறேன், 'நீங்கள் உயிருடன் இருக்கிறீர்களா?' என்று கேட்கிறேன். 26 நாட்களுக்குப் பிறகு என்னுடைய குடும்பத்தாருடன் நேரம் செலவிடுகிறேன். இப்போதுதான் பாதுகாப்பாகவும், நிம்மதியாகவும் உணர்கிறேன். ஆனால், என்னுடைய இதயம் காசாவில்தான் உள்ளது. அது காசாவிலேயே இருக்கும். நான் பணியாற்றிய பாலஸ்தீனிய மக்கள் என் வாழ்க்கையில் நான் சந்தித்த நம்பமுடியாத மனிதர்களில் சிலர்" என்றார் கண்களில் தேங்கிய கண்ணீருடன்.

# பிணைக் கைதிகள் வீடு திரும்ப

# இந்தியர்கள் விளக்கேற்றி வழிபட இஸ்ரேல் தூதர் வேண்டுகோள்



**புதுடெல்லி : நவ. 10,**

**ஹமாஸ் தீவிரவாதிகளிடம் சிக்கியுள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகள் வீடு திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்த தீபாவளிக்கு இந்தியர்கள் விளக்கேற்றி வழிபட வேண்டும் என இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த அக்டோபர் மாதம் 7-ம் தேதி தாக்குதல் நடத்தினர். இதில் இஸ்ரேலியர்கள் 1,100 பேர் உயிரிழந்தனர். மேலும் இஸ்ரேலியர்கள் 240 பேரை ஹமாஸ் தீவிரவாதிகள் பிணைக் கைதிகளாக பிடித்துச் சென்றனர்.

அவர்களை தேடும் பணியில் இஸ்ரேல் ராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. காசா மீதான தாக்குதலை நிறுத்தினால், பிணைக் கைதிகளை விடுவிப்பதாக ஹமாஸ் கூறியுள்ளது. ஆனால், காசா நகரில் தரை வழி தாக்குதல் நடத்தி அந்த நகரை சுற்றிவளைத்துள்ளது இஸ்ரேல் ராணுவம்.

இந்நிலையில் இந்தியாவுக் கான இஸ்ரேல் தூதர் நார் கிலான் எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள வீடியோ செய்தியில் கூறியிருப்பதாவது: பகவான் ராமர் ராவண வதத்துக்குப் பிறகு நாடு திரும்பியதை ஒவ்வொரு தீபாவளியன்றும் மக்கள் விளக்கேற்றி கொண்டாடுகின்றனர். அதுபோல் இந்த தீபாவளிக்கு, இஸ்ரேல் பிணைக் கைதிகளும் நாடு திரும்ப வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்தியர்கள் விளக்கேற்ற வேண்டும், அந்த போட்டோவை #DiyaofHope என்ற ஹேஸ்டேக்குடன் எங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்" என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# "உலகம் முழுவதும் வெறுப்பு அதிகரித்து வருகிறது"

# ஐ.நா. பொதுச் சபை தலைவர் கவலை



**நியூயார்க் : நவ. 10,**

**உலகம் முழுவதும் வெறுப்பு, வெறுப்பு தொடர்பான பேச்சுகள், குற்றங்கள் ஆகியவை அதிகரித்து வருவதாக ஐ.நா பொதுச்சபையின் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் கவலை தெரிவித்துள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள காணொலிப் பதிவில், "இந்த உலகில் வெறுப்புக்கு இடம் இல்லை. கடந்த அக்டோபர் 7 முதல் (இஸ்ரேல்-ஹமாஸ் தாக்குதல் தொடங்கிய தினம்) உலகம் முழுவதும் வெறுப்பும், வெறுப்பு தொடர்பான பேச்சுகள், குற்றங்கள் ஆகியவை அதிகரித்துள்ளன. இது சந்தேகத்துக்கு இடமின்றி முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

ஆன்லைனிலோ அல்லது ஆஃப்லைனிலோ எந்தவொரு அடிப்படையிலும் பாகுபாடு காட்டப்படுவதை நான் கடுமையாகக் கண்டிக்கிறேன். மேலும் ஒரு நபரின் இனம் அல்லது மதத்தில் வேரூன்றியிருக்கும் அச்சுறுத்தல் அல்லது வன்முறைக்கான தூண்டுதலையும் நிராகரிக்கிறேன்.

'எல்லா மனிதர்களும் பிறப்பின் அடிப்படையில், சுதந்திரத்திலும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமானவர்கள்' என்ற மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தின் முதல் வரியை நான் நினைவு கூர்கிறேன்.

வெறுப்புப் பேச்சுகள் வலிமிகுந்த காயங்களை ஆழமாக்குவது மட்டுமின்றி மோதல்களையும், புரிதலின்மைகளையும் தீர்க்கமுடியாது என்கிற அவநம்பிக்கையின் சுழற்சியையும் தூண்டுகிறது. ஆக்கபூர்வமான உரையாடல்களால் மட்டுமே, அனைத்து மக்களிடையே நல்லிணக்கம், பரஸ்பர புரிதல் மற்றும் சகிப்புத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்த முடியும்.

எனவே வெறுப்பு மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்" என்று டென்னிஸ் பிரான்சிஸ் அந்த காணொலியில் தெரிவித்துள்ளார்.

# மாற்று பாலினத்தவரும் கத்தோலிக்க ஞானஸ்நானம் பெறலாம் : வாடிகன் ஒப்புதல்



**வாடிகன் : நவ. 10,**

**மாற்று பாலினத்தவரும் கத்தோலிக்க ஞானஸ்நானம் பெற வாடிகனின் கோட்பாட்டு அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது. அவர்களே ஞானப் பெற்றோராக இருந்தும் தமக்குத்தாமே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்கள் கத்தோலிக்க திருமணங்களில் சாட்சிகளாக இருக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.**

பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நெக்ரி என்ற பாதிரியார் ஒருவர் கடந்த ஜூலை மாதம் 6 கேள்விகள் அடங்கிய ஒரு தொகுப்பை வாடிகனுக்கு அனுப்பியிருந்தார். அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்தும், அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்குதல் குறித்தும் கேட்கப்பட்டிருந்தது. இந்த கேள்விகளுக்கு கடந்த அக்டோபர் மாதம் வாடிகனின் நம்பிக்கைக்கான கோட்பாட்டுத் துறை பதிலளித்துள்ளது. போப் பிரான்சிஸ் ஒப்புதலுடன் கூடிய மூன்று பக்க கடிதத்தை பிஷப் ஜோசப் நெக்ரிக்கு அனுப்பி வைத்தது.

அதில் மாற்று பாலினத்தவர் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் ஆகியோர் திருச்சபைகளில் ஞானஸ்நானம் பெறலாம் என்று ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நம்பிக்கையில் எந்தவித மாற்றங்களோ அல்லது குழப்பங்களோ இருக்கக் கூடாது என்ற நிபந்தனையையும் வாடிகன் முன்வைத்துள்ளது.

அதே போல, உள்ளூர் பாதிரியாரின் விருப்பத்துக்கேற்ப, மாற்று பாலினத்தவர் மற்றும் தன்பாலின ஈர்ப்பாளர்கள் கிறிஸ்தவ திருமணங்களில் சாட்சியாக இருக்கலாம். அதற்கு உள்ளூர் பாதிரியாரின் ஒப்புதல் அவசியம் என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது. எனினும் ஞானஸ்நானத்தில் தன்பாலின ஈர்ப்பாளர்களின் பங்கு என்ன என்பது குறித்த தெளிவான விளக்கங்கள் எதுவும் கூறப்படவில்லை.

வாடிகனின் இந்த அறிவிப்பு உலகம் முழுவதும் உள்ள எல்.ஜி.பி.டி.க்யு. ஆதரவாளர்கள் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர். இது மிக முக்கயமான ஒரு மைல்கல் என்று சமூக வலைதளங்களில் அவர்கள் பதிவிட்டு வருகின்றனர்.

# 545 ஊழியர்கள் அதிரடி பணி நீக்கம் இந்திய சிஇஓ-வின் செயலால் அதிர்ச்சி




**அமெரிக்கா : நவ. 10,**

**அமெரிக்காவில் நல்ல லாபத்துடன் செயல்பட்டு வரும் ஸ்டார்ட் அப் நிறுவனம் ஒன்று தனது ஊழியர்களின் 10 சதவீதம் பேரை திடீரென வேலையை விட்டு அனுப்பி உள்ளதால் ஊழியர்கள் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளனர்.**

உலகில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் அறிமுகமானது முதல் இது மனிதர்களின் வேலைவாய்ப்பை பறித்து விடும் என்ற குரல்கள் ஒலித்து கொண்டே இருக்கிறது. அமெரிக்காவில் நடந்துள்ள நிகழ்வு அதை உண்மையாக்கி உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ரெட்வுட் சிட்டியை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் செயற்கை நுண்ணறிவு ஸ்டார்ட்அப் நிறுவனம் இன்பர்மேட்டிகா. கிளவுட் டேட்டா மேனேஜ்மென்டில் இது முக்கியமான கம்பெனியாக பார்க்கப்படுகிறது. இந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக இருப்பவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரான அமித் வாலியா.

இன்பர்மேட்டிகாவின் வர்த்தகம் நன்றாக போய் கொண்டிருக்கிறது. கடந்த செப்டம்பர் காலாண்டு நிதி நிலை முடிவுகளை அந்நிறுவனம் அண்மையில் வெளியிட்டுள்ளது. அந்த நிறுவனத்தின் நிதி வளர்ச்சி கணித்ததை காட்டிலும் வருவாய் மற்றும் லாபம் அமோகமாக இருந்தது. இதனால் நிறுவனம் மொத்தமும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அந்த நிறுவனம் அடுத்ததாக செய்த ஒரு காரியம் ஊழியர்களை வேதனையில் தள்ளியுள்ளது.

சுமார் 545 பணியாளர்களை வேலையை விட்டு நீக்குவதற்கான திட்டத்தை இன்பர்மேட்டிகா வகுத்துள்ளது. இது அந்நிறுவனத்தின் மொத்த பணியாளர்களில் 10 சதவீதமாகும். இதில் தலைமை அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்களில் 90 பேரும் அடங்குவர்.

இன்பர்மேட்டிகா நிறுவனத்தின் வளர்ச்சியில் கணிசமாக பங்களித்த 10 சதவீத ஊழியர்களை பணிநீக்கம் செய்யும் இரக்கமற்ற முடிவு குறித்து தலைமை செயல் அதிகாரி அமித் வாலியா எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை.

ஆனால் கடினமான முடிவு என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் நிதி நிலை உள்பட எல்லாம் சிறப்பாக இருக்கும் நிலையில், 10 சதவீத பணியாளர்களை வீட்டுக்கு அனுப்ப முடிவுசெய்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இஸ்ரேலின் நடவடிக்கை காட்டுமிராண்டித்தனத்தின் உச்சம் ஹமாஸுக்கு ஆதரவளிக்கும் மலேசியா



**மலேசியா : நவ. 10,**

**ஹமாஸுடன் மலேசியா தனது உறவுகளைப் பேணுவதாகவும், பாலஸ்தீன பிரச்சினையை மலேசியர்கள் ஒருமனதாக ஆதரிக்க வேண்டும் என்றும் பிரதமர் அன்வர் இப்ராஹிம் கூறியுள்ளார்.**

ஹமாஸிற்கு ஆதரவளிக்கும் நாடுகள் மீது தடை விதிக்கும் அமெரிக்காவின் சட்ட வரைவிற்கு பாராளுமன்றத்தில் பதிலளிக்கும்போது பிரதமர் அன்வர் இப்ராஹிம் இதனைத் தெரிவித்தார். நீண்ட காலமாக பாலஸ்தீனர்களுக்கான ஆதரவு பரவலாக இருக்கும் மலேசியா போன்ற ஒரு நாட்டில் இது அரசியல் ரீதியாக பயனுள்ளதாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத்தின் வெளிநாட்டு ஆதரவாளர்களுக்கு தடை விதிக்க கடந்த வாரம் அமெரிக்க பிரதிநிதிகள் சபை வாக்களித்ததை அடுத்து, ஒரு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மலேசிய அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து அன்வர் இப்ராஹிமிடம் கேட்டிருந்தார்.

"இது உட்பட எந்த அச்சுறுத்தல்களையும் நான் ஏற்கமாட்டேன். இந்த நடவடிக்கை ஒருதலைப்பட்சமானது மற்றும் செல்லுபடியாகாது. ஏனெனில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களாகிய நாங்கள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் எடுக்கும் முடிவுகளை மட்டுமே அங்கீகரிக்கிறோம்" என்று அன்வர் கூறினார்.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடான மலேசியா, பாலஸ்தீனத்துக்கு நீண்ட காலமாக ஆதரவளித்து வருகிறது. இஸ்ரேலை மலேசியா இராஜதந்திர ரீதியாக அங்கீகரிக்கவில்லை மற்றும் இரு நாடுகள் தீர்வு நிறைவேற்றப்படும் வரை அத்தகைய அங்கீகாரம் இஸ்ரேலுக்கு வழங்கப்படாது என்று மலேசியா தெரிவித்துள்ளது. மேலும், அதன் தலைநகரான கோலாலம்பூரில் பாலஸ்தீன பிரச்சினைகள் தொடர்பான மாநாடுகள் அடிக்கடி நடத்தப்படும்.

76 வயதான அன்வர் தனது பல்கலைக்கழக நாட்களில் இருந்தே பாலஸ்தீனர்களுக்கான தனது ஆதரவை தெரிவித்துள்ளார். அன்வரின் ஆலோசகராக இருந்த அரசியல் போட்டியாளர் மஹதீர் முகமத், பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக வலுவான கருத்துகளை வெளியிட்டார். இஸ்ரேலின் போர்க் குற்றங்கள் குறித்து மற்ற நாடுகள் அமைதி காப்பதாகவும் அவர்கள் மீதான தனது கண்டனத்தை தெரிவித்திருந்தார்.

அன்வரின் போட்டியாளரான மஹதீர் இப்படி பேசும்போது, மலேசியாவில் மதப் பழமைவாதம் தலைதூக்கி வரும் இந்த நேரத்தில், பிரதமர் அன்வர் வலுவான கருத்தைக் கொண்டிருக்காவிட்டால் அவருக்கு அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று சிங்கப்பூரைச் சேர்ந்த சிந்தனைக்குழு நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஜூலியா லாவ் மற்றும் பிரான்சிஸ் ஹட்சின்சன் ஆகியோர் சமீபத்தில் தெரிவித்திருந்தனர். எனவே அன்வர் நடந்து வரும் இஸ்ரேல்-காஸா போருக்கு பதிலடி கொடுக்கும் வகையில் முன்பு எடுத்ததை விட கடுமையான நிலைப்பாட்டை எடுப்பதாகத் தெரிகிறது.

ஹமாஸ் ஆயுதக்குழுவை கண்டிப்பதற்கு மேற்கத்திய நாடுகள் கொடுக்கும் அழுத்தத்தை அன்வர் இப்ராஹிம் நிராகரித்தார். ஹமாஸ் ஆயுதக்குழுவானது காசாவைச் சேர்ந்த மக்களால் அந்தப்பகுதியை ஆள்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார். மேலும், காசா பகுதியில் இஸ்ரேலின் ராணுவ நடவடிக்கை உலகில் நடக்கும் காட்டுமிராண்டித்தனத்தின் உச்சம் என்று கண்டித்தார். தென்னாப்பிரிக்காவில் நிறவெறியை முடிவுக்கு கொண்டுவர முயன்ற ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸுடன், ஹமாஸ் ஆயுதக்குழுவை ஒப்பிட்டு அவர் பேசினார். "1991 முதல் 1997 வரை நெல்சன் மண்டேலாவையும் பயங்கரவாதி என்றே மேற்குலகம் என சித்தரித்தது. ஆனால் மலேசிய அதிகாரிகள் தொடர்ந்து அவர்களுக்கு ஆதரவளித்தனர்" என அன்வர் கூறினார்.

மலேசியாவில் விழிப்புணர்வு இருக்க வேண்டும். மலேசிய ஊடகங்கள் பாலஸ்தீன மக்களின் கவலைகள் மற்றும் உணர்ச்சிகளை புரிந்து கொள்ள வேண்டும். அதே போல் பாலஸ்தீனர்களின் நிலம், செல்வம் மற்றும் சுயமரியாதை ஆகியவை தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறது. அந்த மக்களின் உரிமைகளை மலேசிய ஊடகங்கள் அங்கீகரிக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

காசாவில் 4,100க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 10,300க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# இங்கிலாந்து பிரதமர் தீபாவளி கொண்டாட்டம் மனைவியுடன் ரிஷி சுனக் விளக்கேற்றி வழிபாடு



**லண்டன் : நவ. 10,**

**தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், பிரதமர் அலுவலகத்தில் சிறப்பு நிகழ்ச்சியை நடத்தினார். அப்போது அவர் இங்கிலாந்து மட்டுமின்றி உலகெங்கிலும் உள்ள இந்துக்களுக்கு அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

தீபங்களின் பண்டிகையாக தீபாவளி பண்டிகை கொண்டாடப்படுகிறது. இந்தியாவில் மிகச் சிறப்பாக கொண்டாடப்படும் இந்த பண்டிகை வெளிநாடுகளில் வாழும் இந்துக்களின் மத்தியிலும் பிரபலமாக கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் இந்திய வம்சாவளியினரான இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கும் தீபாவளி பண்டிகை விமரிசையாக கொண்டாடியுள்ளார்.

10 டவுனிங் தெருவில் உள்ள பிரதமரின் இல்லத்தில் நடந்த இந்த தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியில் ரிஷி சுனக் மற்றும் அவரது மனைவி அக்ஷதா மூர்த்தியுடன் ஏராளமான இந்துக்கள் கலந்து கொண்டனர். பிரதமர் ரிஷி சுனக்கின் அலுவலகம் இதுகுறித்து தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளது. அந்த பதிவில், "பிரதமர் ரிஷி சுனக் தீபாவளிக்கு முன்னதாக இந்து சமூகத்தைச் சேர்ந்த விருந்தினர்களை வரவேற்றார். இது இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றியின் கொண்டாட்டமாகும்.

இந்த வார இறுதியில் கொண்டாடும் இங்கிலாந்து மற்றும் உலகெங்கிலும் உள்ள அனைவருக்கும் சுப தீபாவளி வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளது. மேலும் ரிஷி சுனக் மற்றும் அக்ஷதா மூர்த்தி அவர்களின் அதிகாரபூர்வ இல்லத்தில் பாரம்பரிய தீபங்களை ஏற்றி வைக்கும் படங்களும் பகிரப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவளியை சேர்ந்த ரிஷி சுனக் இந்து மதத்தை கடைபிடித்து வருகிறார். ஜி 20 உச்சி மாநாட்டிற்காக சமீபத்தில் இந்தியா வந்திருந்தபோது, டெல்லியில் உள்ள புகழ்பெற்ற அக்ஷர்தாம் கோயிலில் ரிஷி சுனக் - அக்ஷதா தம்பதியினர் பிரார்த்தனை செய்தனர். அப்போது பேசிய அவர், "நான் ஒரு பெருமைமிக்க இந்து. நான் அப்படித்தான் வளர்க்கப்பட்டேன், அப்படித்தான் இருக்கிறேன்" என்று கூறியிருந்தார். இந்த நிலையில் அவர் தீபாவளி பண்டிகை கொண்டாடியிருப்பதை உலகம் முழுவதும் உள்ள இந்துக்கள் வரவேற்றுள்ளனர்.

# தம்பியின் குழந்தையை பெற்றெடுத்த சகோதரி

**அமெரிக்கா : நவ. 10,**

**அமெரிக்காவில் பெண் ஒருவர், தனது சொந்த கோதரனின் மகனை வயிற்றில் சுமந்து பெற்றெடுத்துள்ள சம்பவம் அரங்கேறி உள்ளது.**

அமெரிக்காவின் கலிபோர்னியாவை சேர்ந்தவர் சப்ரினா. 30 வயதாகும் இவர் சொத்து விவகாரங்களை கவனிக்கும் நிறுவனத்தில் மேலாளராக உள்ளார். இவர் தனது சகோதரர் ஷான் பெட்ரியின் ஆண் குழந்தையை தன் வயிற்றில் சுமந்து பெற்றெடுத்துள்ளார்.

அதாவது ஷான் பெட்ரி ஓரின சேர்க்கையாளராக இருந்து வருகிறார். அவர் பால் என்ற ஆணை திருமணம் முடித்து வாழ்ந்துவருகிறார். அவர்களால் ஒரு குழந்தையை பெற்றெடுக்க இயலாது என்பதால் அதற்காக தனது சகோதரி உதவியை அவர் நாடியுள்ளார். அதன் காரணமாக ஷான் பெட்ரியின் குழந்தையை சப்ரினா தனது வயிற்றில் வளர்த்து



பெற்றெடுத்துள்ளார்.

இதற்காக முறைப்படியான மருத்துவமனையை அணுகி ஷான் பெட்ரியின் விந்தணுவை சரோகேசி முறையை பயன்படுத்தி சப்ரினாவின் கருப்பைக்குள் வைத்திருக்கின்றனர். கருநன்கு வளரத்தொடங்கி குழந்தையாக உருப்பெற்றுள்ளது. பத்து மாதம் சுமந்து அழகான ஆண் குழந்தையை சப்ரினா பெற்றெடுத்துள்ளார். உயிரியல் ரீதியில் இது ஷான் பெட்ரியின் குழந்தையாக அமைந்துள்ளது.

குழந்தை பிறந்து ஐந்து மாதங்களுக்கு மேல் ஆன நிலையில் தற்போது தான் தாய் மற்றும் சேயின் படங்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளனர். ஒரு தாயாக அல்லாமல் அத்தையாக இந்த குழந்தையை தான் மிகவும் நேசிப்பதாக சப்ரினா கூறியுள்ளார். இன்னும் தனது சகோதரனின் குழந்தைகளை பெற்றெடுக்க விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.






புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், மாவட்ட அளவிலான உஜ்வாலா கமிட்டி கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, தலைமையில் நேற்று நடைபெற்றது. உடன் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சாந்தி, இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் நிறுவனத்தின் மாவட்ட பிரதிநிதி அக்ஷய் திமோதி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

# காவிரி விவகாரம் தொடர்பாக கர்நாடக சட்ட நிபுணர்களுடன் டி.கே.சிவகுமார் ஆலோசனை



பெங்களூரு, நவ. 10–

கடந்த 3–ம் தேதி நடந்த காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், நவம்பர் 23–ம் தேதி வரை தமிழகத்துக்கு விநாடிக்கு 2600 கனஅடி நீரை திறந்துவிட வேண்டும் என கர்நாடகாவுக்கு உத்தரவிடப்பட்டது.

ஆனால், கர்நாடக துணை முதல்வரும் நீர்வளத்துறை அமைச்சருமான டி.கே.சிவகுமார், ''கிருஷ்ணராஜசாகர் அணையில் போதிய நீர் இல்லை. தற்போது இருப்பில் உள்ள நீரைக் கொண்டே கர்நாடகாவின் பாசனம் மற்றும் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. எனவே தமிழகத்துக்கு காவிரி நீரை திறக்க இயலாது” என்றார்.

இதுகுறித்து டி.கே. சிவகுமார் முதல்வர் சித்தராமையாவுடன் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆலோசனை செய்தார். பின்னர் டெல்லிக்கு சென்ற அவர் காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவு குறித்து மூத்த வழக்கறிஞர்கள் ஃபாலி எஸ் நரிமன், பி.வி. ஆச்சார்யா உள்ளிட்ட சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அந்த கூட்டத்தில் காவிரி மேலாண்மை ஆணையத்தின் உத்தரவுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மறு பரிசீலனை மனு தாக்கல் செய்வது, அந்த வழக்கில்வாதிட வேண்டிய கருத்துகள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

மேலும் மேகேதாட்டுவில் அணை கட்டுவதற்கு அனுமதி கோருவது தொடர்பான விவகாரத்தையும் உச்ச நீதிமன்றத்தில் நினைவூட்டல் மனு தாக்கல்செய்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.




புதுக்கோட்டை கிரவுண்ட் சிட்டி ரோட்டரி சங்கத்தின் தீபாவளி கொண்டாட்டம் நேற்று கிங் டவுன் ரோட்டரி ஹாலில் சங்கத்தின் தலைவர் செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிங் டவுன் ரோட்டரி சங்க நிர்வாகிகள் கான் கபர்கான், வில்சன் ஆனந்த், திருச்சி டைமன் சிட்டி சங்கத்தின் சரவணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியில் பாதுகாப்பான தீபாவளி குறித்து விழிப்புணர்வு மற்றும் துண்டுபிரசுரம் வழங்குதல்



புதுக்கோட்டை, நவ.10–

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்புடன் பட்டாசுகளை வெடிப்பது எப்படி என்ற துண்டு பிரசுரத்தை பள்ளி முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி வழங்கினார், தீபாவளிக்காக பட்டாசு வெடிக்கும் மாணவர்கள் பட்டாசுகளை பெரியவர்கள் துணையுடன் வெடிக்க வேண்டும் என்றும் வாளியில் தண்ணீரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் பட்டாசுகளை வெடிக்கும் போது பச்சிளம் குழந்தைகளை, முதியவர்களை, உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களை இடையூறு செய்யாதவாறு பட்டாசுகளை வெடிக்க வேண்டும், பட்டாசுகளை கைகளில் வைத்துக்கொண்டு வெடிக்கக் கூடாது. மின் கம்பங்கள், மின் மாற்றிகள் இருக்கும் இடங்கள் மற்றும் குடிசைப் பகுதிகளில் பட்டாசுகள் வெடிப்பதை தவிர்க்க வேண்டும், மருத்துவமனைக்கு அருகில் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது. பறவைகளை, விலங்குகளை அச்சப்படுத்தும் வகையில் பட்டாசு வெடிப்பதை தவிர்க்க வேண்டும். பட்டாசு வெடிப்பது மகிழ்ச்சிக்காகத்தான் என்பதை உணர வேண்டும், பிறர் துன்பப்படும்படி நாம் பட்டாசு வெடிக்கக் கூடாது.

வானில் சாகசம் செய்யும் ராக்கெட் போன்ற வெடிகளை வெட்டவெளிகளில், குடிசைகள் இல்லாத பகுதிகளில் மட்டுமே வெடிக்க வேண்டும் என்பன போன்ற பாதுகாப்பு குறிப்புகள் அடங்கிய துண்டு பிரசுரத்தை வழங்கியதோடு மாணவர்களிடம் பாதுகாப்பான தீபாவளியின் முக்கியத்துவத்தையும் பள்ளி முதல்வர் கவிஞர்தங்கம் மூர்த்தி கூறினார்.

மாணவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான தீபாவளியாக அமைய தன்னுடைய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்தார், இந்நிகழ்வில் பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல் அருகில் இருந்தார், இந்த துண்டு பிரசுரம் பெற்றோர்களுக்கும் வழங்கப்பட்டது.







PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# காரைக்காலில் அரசு மகளிர் கல்லூரியில் முதல் முறையாக வாக்காளர்கள் உடன் கலெக்டர் கலந்துரையாடல்

காரைக்கால்,நவ,10

காரைக்காலில் அமைந்துள்ள அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் முதல் முறையாக வாக்காளர் தகுதி உள்ளவர்களுக்கான ஓட்டு பதிவு வாக்கு சீட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சியானது நேற்று காலை நடைபெற்றது.




காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சியருமான குலோத்துங்கன் சிறப்பு அழைப்பாளராக பங்கு பெற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் பாலாஜி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். காரைக்கால் மாவட்ட NSS ஒருங்கிணைப்பாளர் முனைவர் எம். தாமோதரன் வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்ட ஆட்சியர் முதல் முறையாக வாக்குரிமை பெற தகுதியுள்ள மாணவிகளிடையே தேர்தலில் முக்கியத்துவத்வையும் ஒவ்வொரு வாக்கும் தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றும் அதன் சிறப்புகளையும் எடுத்துரைத்தார்கள். மேலும் சிறப்பு முகாம் காரைக்காலில் நவம்பர் 18 19ஆம் தேதிகளில் அந்தந்த ஊர் வாக்கு சாவடிகளில் நடைபெறுகிறது என்றும் இதில் அனைவரும் தங்கள் பெயர்களை சேர்த்தல் நீக்குதல் ,திருத்துதல் போன்றவற்றை செய்யுமாறும் எடுத்துக் கூறினார்.

மேலும் மாணவிகள் இடையே உள்ள உறவினர்கள் மற்றும் உள்ளூர் மக்களிடையே இந்த நிகழ்ச்சியை எடுத்துரைக்க வேண்டும் என்றும், அனைவரையும் வாக்கு சாவடிகளுக்கு சென்று தங்கள் பெயர் உள்ளதா என சரிபார்த்துக் கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டார்.

முதல் முறை வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை விளக்கினார். முதல் முறை வாக்காளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை எடுத்துரைத்து அவற்றை எவ்வாறு தீர்ப்பது என மேலும், வாக்களிக்கும் போது ரகசியம் காக்க வேண்டியது கட்டாயம் என்றும் தெரிவித்தனர். நிகழ்ச்சியில் அனைத்து மாணவர்களும் முழு மனதுடன் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் அலுவலர்கள் மாணவிகள் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# ஜவுளி கடையில் நரிக்குறவர்களுக்கு பிடித்த புத்தாடைகள் வாங்கி கொடுத்த சமூக ஆர்வலர்

மயிலாடுதுறை , நவ. 10-

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆதரவற்றோர் முதியோர் மாற்றுத்திறனாளிகள் மனநலம் பாதிக்கப்பட்டோர் ஏழை எளியோருக்கு புத்தாடை வழங்கிய சமூகசேவகருக்கு குவியம் பாராட்டு.



மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, பெரம்பூர் பகுதியை சேர்ந்தவர் பாரதி மோகன் தனது ஏழ்மை நிலையிலும் பாரதிமோகன் அறக்கட்டளை என தொடங்கி நாள்தோறும் பசித்தோருக்கு உணவளித்து வருகிறார். இந்நிலையில் தற்பொழுது தீபாவளி பண்டிகை ஒட்டி ஆயிரக்கணக்கானோருக்கு புத்தாடைகள் வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

தனது சேவை மூலம் மனநலம் பாதிக்கப் பட்டவர்களுக்கு முடி திருத்தம் மற்றும் குளிப்பாட்டி அவர்களுக்கு உடை மற்றும் உணவு அரசு ஒப்புதலுடன் முறைப்படி செய்து வருகிறார் இந்த சேவையை அனைவரும் பாராட்டி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தீபாவளி திருநாளை முன்னிட்டு சாலை ஓரங்களில் வசிக்கும் ஆதரவற்றோர் முதியோர் மாற்றுத்திறனாளிகள்மனநலம் பாதிக்கப்பட்டோர் ஏழை எளிய குடும்பத்தினருக்கு தேடி சென்று புத்தாடைகள், புடவை, வேஷ்டி, கைலி, துண்டு போர்வை வழங்கி வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக வைத்தீஸ்வரன் கோவிலில் பேருந்து நிலையத்தில் வீடு இன்றி தங்கி இருந்த நரிக்குறவர் சமுதாயத்தை சார்ந்த சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை உள்ள குடும்பத்தை தனது வாகனத்தில் அழைத்து சென்று வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள துணிக்கடையில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப புத்தாடைகளை வாங்கி அவர்களுக்கு வழங்கி அவர்களை மகிழ்வித்தார். இச்சம்பவம் கடையில் இருந்த உரிமையாளர் முதல் ஊழியர்கள் வாடிக்கையாளர் என அனைவரையும் நெகிழ செய்தது இதன் மூலம் அவருக்கு தொடர்ந்து பாராட்டுகள் குவிந்து வருகிறது.

# சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் தனது தொகுதியில் பல்வேறு நிகழ்வில் கலந்து கொண்டார்



காட்டுமன்னார் கோயில். நவ.10

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தந்த சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன் மேளதாளத்துடன் பட்டாசு வெடித்து பொதுமக்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதை தொடர்ந்து காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கூடுவெளிச்சாவடி வீரநத்தம் மேலவன்னியூர் உள்ளிட்ட கிராமங்களில் காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் அவர்களின் சட்ட மன்ற தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட பயணியர் நிழற்குடை நியாயவிலை கடை அரசு மேல்நிலைப் பள்ளியில் கழிவறை கட்டிடம் உள்ளிட்ட கட்டிடங்களை திறந்து வைப்பதற்காக காட்டுமன்னார் கோயில் வருகை தந்த தொல் திருமாவளவன் நாடாளுமன்ற உறுப்பினர் குமராட்சி ஒன்றியம் மேலவன்னியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுடன் உரையாடல் மேற்கொண்டார்.

எழுச்சி தமிழர் திருமாவளவன் கல்விதான் வாழ்க்கையில் மிக முக்கிய செல்வம் டாக்டர் அம்பேத்கர் காரல் மார்க்ஸ் உள்ளிட்ட பெரிய தலைவர்களை உலகுக்கு அறிமுகப்படுத்தியது கல்வி மட்டும் தான் என நினைவுகூர்ந்தார் முன்னதாக பள்ளி வளாகத்தில் மரக்கன்று நடும்நிகழ்வு நடைபெற்றது இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் மாவட்ட செயலாளர் மணவாளன் தொகுதி துணை செயலாளர்கள் வெற்றி வேந்தன் சட்டமன்ற உறுப்பினர் உதவியாளர் கஸ்பா பாலா வானமாதேவி ராஜா ஒன்று குழு உறுப்பினர் செல்வகுமார் எள்ளேரி பிரபு பகலவன் தென்னவன் கலையரசன் பூச்சந்திரன் குமராட்சி ராஜேந்திரன் பாலமுருகன் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## மிசா.கும்மிடிப்பூண்டி கி.வேணு படத்தை

# திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தினார்





ஊத்துக்கோட்டை, நவ10-

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், பன்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் மறைந்த மிசா. கும்மிடிப்பூண்டி கி.வேணு ஆவார்.திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினராகவும், முன்னாள் திருவள்ளூர் மாவட்ட செயலாளராகவும்,முன்னாள் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்து வந்தார்.உடல்நிலை பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த இவர் கடந்த மாதம் 20-ந் தேதி காலமானார்.

இவரது மகன் கி.வே. ஆனந்தகுமார் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய திமுக செயலாளராக பதவி வகித்து வருகிறார். இவரது மகள் உமாமகேஸ்வரி திருவள்ளூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவராக பதவி வகித்து வருகிறார். இந்நிலையில்,மிசா. கும்மிடிப்பூண்டி கி.வேணு படத்திறப்பு விழா மற்றும் புகழ் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.எனவே,அவரது வீட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்தை திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதன் பின்னர், எம். வி.பேரடைஸ் திருமண மண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மிசா. கும்மிடிப்பூண்டி கி.வேணு படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.இதன் பின்னர், புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு,திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே.கோவிந்தராஜன் தலைமை தாங்கினார். கி.வே.ஆனந்தகுமார், கே.வி. ஜி.உமாமகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். அனைவரையும் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் வரவேற்றார். திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு, கட்சியின் அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சரும், மாவட்ட பொறுப்பாளருமான ராணிப்பேட்டை காந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் பூவிருந்தவல்லி ஆ,கிருஷ்ணசாமி,எழும்பூர் பரந்தாமன் ஆகியோர் கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தி பேசினர்.

இந்நிகழ்ச்சியில், மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் இ.ஏ.பி. சிவாஜி,பா.சே.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, வெ. அன்புவாணன், கே. வி.லோகேஷ், ஏன்னம்பாக்கம் சம்பத், வக்கீல் வெங்கடாஜலபதி, டி.ஜே. ஜி.தமிழரசன், மு.மணிபாலன், டி.கே.சந்திரசேகர், ஜான் பொன்னுசாமி, ஆ.சத்தியவேலு, தங்கம்முரளி, பரிமளம், செல்வசேகரன்,ரமேஷ்ராஜ், பரிமளம்விஸ்வநாதன், ரவிக்குமார், அறிவழகன், பி.முத்து, டி.கண்ணதாசன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள்பல்வேறுகட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், அரசு துறை அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி அரசு தேசிய ஆயூர்வேத விழிப்புணர்வு தினம்

காரைக்கால் , நவ. 10-

காரைக்கால் நலவழித்துறை சார்பில் 8-ஆவது தேசிய ஆயுர்வேத தின விழிப்புணர்வு பேரணி முருகாத்தாலாட்சி பெண்கள் அரசு மேல்நிலை பள்ளியில் நடைப்பெற்றது.



இவ்விழிப்புணர்வு பேரணியை நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இப்பேரணியில் ஆயூர்வேத சிகிச்சைகள் பற்றிய விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது இப்பேரணியில் மாணவியர்கள், ஆசிரியர்கள் ஆயூர்வேத மருத்துவர்கள் கலந்துக் கொண்டனர்

# காரைக்காலில் சிறுதானிய உற்பத்தி நுகர்வு தலைப்பிலான இரண்டு நாள் சர்வதேச கருதரங்கு துவக்கம்

காரைக்கால்,நவ,10

காரைக்கால் செருமாவிலங்கையில் அமைந்துள்ள பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் பொருளியல் மற்றும் விரிவாக்கத்துறை மூலமாக நவம்பர் 9 மற்றும் நவம்பர் 10 ஆகிய இரு நாட்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சிறுதானிய உற்பத்தி நுகர்வு தலைப்பிலான இரண்டு நாள் சர்வதேச கருதரங்கின் துவக்க விழா நேற்று நடைபெற்றது. கல்லூரியின் கருத்தரங்கு கூடத்தில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் குத்துவிளக்கேற்றி நிகழ்வை துவக்கி வைத்தார்.



இந்நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் முனைவர் புஷ்பராஜ் முன்னிலை வகித்தார். சிறுதானிய உற்பத்தி ஊட்டச்சத்து பாதுகாப்பு சிறுதானிய உபயோகம் சந்தைப்படுத்துதல் சிறுதானிய உற்பத்தியாளர்கள் மேம்பாடு ஆகிய தலைப்புகளில் விவாதித்து முக்கிய முடிவுகளை வரைந்து பரிந்துரைக்கும் நோக்கில் சர்வதேச சிறுதானிய ஆண்டில் நடைபெறும் இந்த கருத்தரங்கை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்து கருத்தரங்க மலரை வெளியிட்டார்.

அதோடு தற்போதைய சம்பா பருவ சூழலில் சிறுதானிய பயிர்கள் ஒரு சிறந்த மாற்றுப் பயிராக அமைவதால் பயிர்களின் உற்பத்தி திறனையும் சந்தைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துவது குறித்தும் விவாதிக்க வேண்டும் எனவும் பேசினார். நிகழ்ச்சியில் தலைமை உரையாற்றிய கல்லூரி முதல்வர் புஷ்பராஜ் நிறுவனங்களின் உதவியோடு செயல்பட்டு வரும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு திட்டங்கள் பற்றியும் மத்திய அரசின் உயர் தொழில்நுட்பத் துறை மூலமாக ஸ்டார் அந்தஸ்து வழங்கப்பட்டது குறித்தும் பேசியதோடு கல்லூரி பல்கலைக்கழகமாக உருவாக அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுவதாக கூறினார்.

ஆசிய வளர்ச்சி வங்கியின் ஆலோசகரான பொருளாதார நிபுணர் முனைவர் உமாசங்கர் குறைவான நீரைக் கொண்டு அதிக வருமானம் ஈட்டுவதில் சிறுதானிய பயிர்களில் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். ஐதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் மேலாண்மை முகமையின் முதன்மை விஞ்ஞானி முனைவர் கணேஷ் குமார் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக திருச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் முனைவர் மாசிலாமணி ஆகியோர், இக்கருத்தரங்கில் பங்கு கொண்டுள்ள அனைவரும் தினம் ஒரு வேலையாவது சிறுதானிய உணவை உண்ண வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்கள்,மேலும் இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா அரசு கல்லூரி பேராசிரியர் அரச கேசரி உலக உணவு பரிசு வாங்கிய கோவிந்தராஜ் கலந்து கொண்டார்'

# காஷ்மீரில் என்கவுன்ட்டர் – தீவிரவாதி சுட்டுக் கொலை : பாக். துப்பாக்கிச் சூட்டில் பிஎஸ்எ.ஃப் வீரர் காயம்

சோபியான், நவ. 10-

காஷ்மீர் மாநிலம் சோபியான் மாவட்டத்தில் நடந்த என்கவுன்ட்டரில் தீவிரவாதி ஒருவர் பாதுகாப்புப் படையினரால் கொலை செய்யப்பட்டார். கொல்லப்பட்ட தீவிரவாதி மைசர் அகமது தர் என்று அடையாளம் தெரிந்துள்ளது. இவர், 'தி ரெஸிஸ்டன்ஸ் ப்ரண்ட்' என்ற இயக்கத்துடன் தொடர்புடையவராக அறியப்படுகிறார்.

இது ஒருபுறம் இருக்க சம்பா மாவட்டம் ராம்கர் பகுதியில் பாகிஸ்தான் ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் எல்லை பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார். சம்பா மாவட்டத்தில் கடந்த 24 நாட்களில், எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி நடந்துள்ள 3வது தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.


இதற்கிடையில், காஷ்மீர் பள்ளத்தாக்கில் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டை தொடர்கிறது. ஜெய்ஷ் இ முகமது இயக்கத்தைச் சேர்ந்த உமர் அமீன், தெற்கு காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டத்தைச் சேர்ந்த இவரை பாதுகாப்புப் படையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.


முன்னதாக கடந்த செவ்வாய்க்கிழமை காஷ்மீர் காவல்துறை சார்பில் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதில், அண்மையில் காஷ்மீரில் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஒரு புலம்பெயர்ந்த தொழிலாளியும், ஒரு காவலரும் கொல்லப்பட்டனர். அச்சம்பங்களில் தொடர்புடையவர்கள் பற்றி துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ.10 லட்சம் சன்மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஒப்பந்தகாலத்திற்கு முன்பாகவே கட்டுமானப்பணிகள் நிறைவு. வேலூரில் அமைச்சர் எ.வ.வேலு பெருமிதம்

வேலூர். நவ.10.

வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் ரூ.197.81 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கான கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு பார்வையிட்டு ஆய்வு செய்தார்.





வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் ரூ.197.81 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கான பணியினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக 22.08.2023 அன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இக்கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது அவர் பொதுப்பணித்துறை அலுவலர்களிடம் இம் மருத்துவமனை கட்டுமான பணிகளை தரமாகவும், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் விரைந்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

அதன் பின்னர் அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்ததாவது. வேலூர் மாவட்டம் என்பது ஒரு காலத்தில் ஒருங்கிணைந்த வடாற்காடு மாவட்டமாக இருந்தது. வடாற்காடு மாவட்டமாக இருந்தபோது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்து மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றினேன். எனவே இது என்னுடைய சொந்த மாவட்டம் என்று சொல்வது கூட எனக்கு பெருமை. இந்த மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்ட பொழுது மருத்துவமனையானது அடுக்கம்பாறைக்கு சென்று விட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த பொழுது இதையெல்லாம் சட்டமன்றத்தில் செவி கொடுத்து கேட்ட காரணத்தினால் தற்பொழுது இந்த மருத்துவமனையை புதுப்பித்து பன்னோக்கு மருத்துவமனையாக 3 லட்சத்து 71 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் கட்டமைக்க ரூபாய் 197,81 கோடி நிதி ஒதுக்கி உத்தரவிட்டுள்ளார். இந்தப்பணியானது மூன்று பகுதியாக கட்டப்படுகிறது. இதற்கான ஒப்பந்தங்கள் முறையாக கோரப்பட்டு பணிகள் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டு இந்த பணியானது தொடங்கி வைக்கப்பட்டது. இந்த பணிகள் தரமாக, முறையாக கட்டப்படுகிறதா என்பதை ஆய்வு செய்வதற்காகவே நான் இங்கு வந்தேன். பொதுப்பணிதுறையின் சார்பில் கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு முன்பாகவே கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகிறது என்பது இந்த ஆட்சியில் மிகச்சிறந்த சாதனையாக உள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

மேலும் பொதுப்பணிதுறையின் தலைமைப் பொறியாளர் உட்பட அனைத்து பொறியாளர்களுக்கும், ஒப்பந்ததாரர்களுக்கும் வேலூர் மாநகரில் அமைந்துள்ள புகழ்பெற்ற இந்த பெண்ட்லேண்ட் மருத்துவமனை கட்டடத்தை தரமாகவும், விரைந்து முடிக்கவும் அறிவுரை வழங்கியுள்ளேன். எனவே இந்த மருத்துவமனை கட்டடத்தை விரைந்து முடிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பொதுப்பணிதுறையின் சார்பில் மேற்கொள்ளப்படும் என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.குமாரவேல் பாண்டியன் சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், தேவராஜ் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் ஆயிரத்தரசு ராஜசேகரன், சிறப்பு தலைமை பொறியாளர் சங்கரலிங்கம், செயற்பொறியாளர் ஜெயராமன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பீகார் சட்டப்பேரவையில் இட ஒதுக்கீட்டை 65 சதவீதமாக உயர்த்தும் மசோதா தாக்கல்

# இஸ்ரேல் - ஹமாஸ் போர்: மத்திய அரசை கண்டித்து போராட்ட அறிவிப்பு






# குற்றப் பின்னணி: எம்பி, எம்எல்ஏக்கள் வழக்குகளை விரைந்து விசாரித்து தீர்ப்பு

சென்னை / புதுக்கோட்டை | 10.11.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சுரேந்திரநாத் பானர்ஜி , இந்திய அரசியல்வாதி, கல்வியாளர் (பி.1848) (இ.1925)



வி. கணபதி அய்யர் , இந்தியக் கணிதவியலாளர் (பி.1906) (இ.1987)



தத்தோபந்த் பாபுராவ் தெங்காடி , இந்துத்துவாதி, தொழிற்சங்கத் தலைவர் (பி.1920) (இ.2004)



கேசரிநாத் திரிபாதி , இந்திய அரசியல்வாதி (பி.1934) (இ.2023)



## இன்றைய நினைவு நாள்

தமிழ்வாணன் , தமிழக எழுத்தாளர், இதழாசிரியர் (பி.1926) (இ.1977)



புஷ்பா தங்கதுரை , தமிழக எழுத்தாளர், செயற்பாட்டாளர் (பி.1931) (இ.2013)



டி. என். சேஷன் , இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையர் (பி.1932) (இ.2019)

